சுதேசமித்திரன்

29—8—48

விலை 4 அணா

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

ஒரு புராதன வைத்தியம்
இவ்விதமாகவே நல்ல செய்திகள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ் கிரைப் வாட்டர் குழந்தைகளை நன்கு பாதுகாக்கிறது
IMPORTANT TO MOTHERS
WOODWARD'S CELEBRATED
WOODWARD'S
GRIPE WATER
keeps baby well
I-WW 111-111
W. WOODWARD LTD. LONDON, ENGLAND

ஜாதகம் ! ஆரூடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்

கட்டண விவரம்:—1 முதல் 3. உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2.
3-க்குமேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5.
ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 2.
குறிப்பு:—வெளிநாட்டிற்கு இரட்டிப்புக் கட்டணம்.

சில - நற்சாட்சிகள் :

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ்:— "தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது."

ராவ்பகதூர் C. V. கிருஷ்ணஸ்வாமி B. A., ரிடையர்டு Dy. S. P. அண்டு அட்வகேட், உறையூர் கூறுவது:—ஜோதிஷ உலகில் இவரது சாஸ்திர ஞான கியாதி இணையில்லாதது. இவர் கூறும் ஜாதக பலன்களைக் கேட்டவர், அவைகள் உண்மையாகவும், பூர்த்தியாகவும், ஆச்சரியமாகவும் இருப்பதை உணர்வதுடன் அவரை உண்மையில் இம்மை மறுமைக்கு வழித்தோழராகவும், ஆப்த நண்பராகவும் இருப்பதை அறிவார்.

Sri B. K. சதுர்வேதி - பார்-அட்-லா, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், ஸுரத்கார்-பிகானிர் ஸ்டேட் :—தங்களுடைய ஜோதிஷ பலன்கள் மிகவும் உண்மையாகவும், அதி ஆச்சரியமாயும் விளங்கின. தாங்கள் பெரிய ஸ்டேட் ஜோதிஷராய்-ராஜ் ஜோதிஷராய் பிரகாசிக்கத் திறமை வாய்ந்தவர்".

Sri E. J. இராஜரத்னம், சிலோன்-சிவில் ஸர்விஸ், கவர்ன்மெண்ட் ஏஜண்டு, களுடாரா, கொழும்பு, சிலோன்:—"தங்களுடைய ஜோதிஷ கணிதஞானத்தையும், பலன் கூறும் முறையையும் கண்டு மிகவும் மெச்சுகிறேன். இவ்வளவு ஆச்சரியமாயும், உண்மையாகவும். எதிர்கால பலன்களை கூறுவீர்கள் என்று நான் எண்ணவே இல்லை.

T.V. ஜெயராம சாஸ்திரிகள், ஆயுர்வேத பண்டிட் & ஜோதிஷ வித்வான்.

வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ, தெப்பக்குளம் P. O.
(தென் இந்தியா)

தந்தி விலாசம் ; "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

குகன் சோப்புகள்



சலவைக்கு சிறந்தவை

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

இந்தியாவின் புகழ்

லோத்ரா

கர்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS.394

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள் :—

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,

பர்ஹாம்பூர்—செகந்திராபாத்

பெஜவாடா — மதுரை.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ ஆவணி௴ 14உ ★ 1948-௵ ஆகஸ்டு௴ 29உ No. 31

ராஜாஜியின் உபதேசம்

இந்தியாவின் கவர்னர் ஜெனரல் பதவியை ஏற்றுக்கொண்ட பிறகு சென்னை நகருக்கு முதன் முறையாக விஜயம் செய்த ராஜாஜிக்கு சென்ற வாரம் மக்கள் அளித்த வரவேற்பு அமோகமானது. பிரதம மந்திரி நேரு வந்துவிட்டுப் போன பூரிப்பில் ஆழ்ந்திருந்த சென்னை, ராஜாஜியின் விஜயத்தால் ஆனந்தத்தில் மிதக்கக் கண்டோம். அரிய தொண்டினாலும், அற்புதமான தியாகத்தாலும்மாசுமருவற்றுப்பிரகாசிக்கும்ஒரு சிறந்த அறிவாளி இன்று ஆட்சி பீடத்தின் சிகரத்திலிருப்பது கண்டு மக்கள் களிப்பெய்துவது சகஜம்; அரசியலாகட்டும், இன்னும் வாழ்க்கையிலுள்ள இதர துறைகளாகட்டும்; ராஜாஜியின் தீர்க்க தரிசனமும், மேதையும் முதல் படியிலேயே நின்று வந்திருக்கின்றன. எனவே இந்தியாவின் இதர பகுதிகளுக்கு கிட்டாததொரு பாக்கியத்தைத் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. ஆனால் இந்தத் தனிச் சிறப்பு ஏகபோகமாக தமிழ்நாட்டின் உரிமையாகாமல் அகில இந்தியாவுக்கும் உரிமையானது தமிழ்நாட்டுக்கு இன்னும் கௌரவமேயாகும்.

சென்னை நகரில் தங்கியிருந்த 3 நாட்களில் ராஜாஜி அநேகம் வைபவங்களில் கலந்துகொண்டார். கார்ப்பொரேஷன், சட்ட சபையில் நடந்த காந்திஜி படத் திறப்புவிழா, சர்வகலாசாலை பட்டமளிப்பு முதலிய நிகழ்ச்சிகளில் அவர் செய்த பிரசங்கங்கள் அனைத்திலும் வற்புறுத்தப்பட்ட விஷயங்கள் அன்பு, ஒத்துழைப்பு, பரஸ்பரநம்பிக்கை, சௌஜன்யம் ஆகியவைதான். இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டதென்பதுண்மையே. ஆனால் அந்த சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு அடிப்படையாகவுள்ள அம்சங்கள் இன்று நாட்டில் பூர்ணமாக இல்லை. சண்டைகள், பூசல்கள் எவ்வளவு தானிருந்தாலும் உலகத்தின் கண் முன் நாமெல்லோரும் சத் பிரஜைகள், சிறந்த கலைப்பண்புடன்கூடிய ஒரு தேச மக்கள் என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டிய பெரும் பொறுப்பை நாம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. இந்தக் கடமை இனிது நிறைவேறுவதற்கான மார்க்கத்தையேதான் ராஜாஜி அநேகமாகத் தாம் பேசிய ஒவ்வொரு கூட்டத்திலும் அறிவுறுத்தியிருக்கிறார். மைசூர், திருவாங்கூர் முதலிய இடங்களிலும் தேச க்ஷேமம் ஓங்குவதற்கான உபதேசங்களைச்செய்திருக்கிறார். பட்டமளிப்பு விழாவில் பட்டதாரிகளுக்குச் செய்த உபதேசம் மற்றவர்களுக்கும் பொருத்தமானதுதான். விடுதலை கிட்டும்வரை அந்நியருடன் போராடுவதிலே நமது பொழுதெல்லாம்கழிந்தது. ஆனால் தற்போதைய புதிய நிலைமையில் பழைய மனோபாவத்துக்குச் சிறிதும் இடமில்லை. அடைந்த சுதந்திரத்தைக் கொண்டு மக்களது வாழ்வைப் பல வழிகளிலும் இன்பமயமாக்குவதே இப்போது முதல் கடமை. இது ஈடேற அனைவரும் பரஸ்பரம் அந்தரங்கமான அன்பு கொள்ளவேண்டும்; நாட்டை வளப்பமுறச்செய்ய ஒவ்வொருவரும் ஓயாமல் உழைக்கவேண்டும் என்று ராஜாஜி வற்புறுத்தியுள்ளார். வெகு காலமாக வெளியாகி வந்திருக்கும் ஒரு அறிவுரைதான் இது. எனினும் மற்றெப்பொழுதையும்விட தற்போதைய நிலையில் அவ்வுபதேசம் ஆயிரம் மடங்கு வேகமும், பொருளும் வாய்ந்தது என்பதை தேச நிலையைச் சிறிது ஊன்றிக் கவனிக்கும் யாரும் ஒப்புக்கொள்வர்.

★

சென்னை மந்திரிகள் முன்கூடி ஒதுங்கி நிற்க ராஜாஜி விமானகூடத்தில் ஜெய் ஹிந்த் வணக்கம் செ[illegible]



கவர்னர் ஜெனரல் ராஜாஜி சென்ற 23-ந்தேதி சென்னை விமானக்கூடம் வந்திறங்கியதும் கவர்னர் மே. க. நையும், அவர் மனைவியும் அவரை கைகுலுக்கி வரவேற்றனர். விமானத்திலிறங்கியதும் ராஜாஜி கவர்னரோடு உல்லாஸமாகச் சம்பாஷிக்கையில் எடுத்த படம்.

நகரசபை வரவேற்றது.

☆

கவர்னர் ஜெனரலாகி முதல் தடவையாக சென்னை வரும் ராஜாஜிக்கு நகர சபை பிரமாதமான வரவேற்பு அளித்தது. கார்ப்பரேஷன் கட்டிட அமைப்பைக்கொண்ட பேழை ஒன்று அவருக்கு அளிக்கப்பட்டது. பக்கத்து படத்தில் ராஜாஜி பேழையை ஏற்றுக் கொண்ட பின்பு பேசுகிறார். கீழ் படத்தில் மேயர் டாக்டர் கிருஷ்ணராவ் அளிக்கும் பேழையை ராஜாஜி ஏற்கிறார். நடுவில் வீற்றிருப்பது நமது பிரதமர் ஸ்ரீ ரெட்டியார்.





பக்கத்துபடம்: சென்னை அஸெம்பளி ஹாலில் ராஜாஜி திறந்து வைத்த மகாத்மாஜியின் உருவப்படம். கீழ்படத்தில் தியாகராய நகர் தக்கர் பாபா ஹாஸ்டலுக்கு கவர்னர் ஜெனரல் அஸ்திவாரக்கல் நாட்டுகிறார். ராஜாஜி பக்கத்தில் இருப்பது திவான்பகதூர் வி. பாஷ்யமய்யங்கார். அஸ்திவாரக்கல்லை நாட்டிவிட்டு ராஜாஜி பேசுகிறார்.







பக்கத்துபடம்: மயிலை ஸ்ரீநிவாஸா காந்தி நிலையத்திற்கு விஜயம் செய்த ராஜாஜி தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு பதில் அளிக்கிறார். கீழ்படத்தில் எதிராஜ் காலேஜுக்கு வருகிறார் ராஜாஜி. அவரை காலேஜின்போஷகர் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார். பெண்கள் மணம் புரிந்துகொண்டு உடனே குடும்ப வாழ்க்கையில் ஈடுபட வேண்டுமென இங்குதான் ராஜாஜி கூறினார்.









சென்னை அஸெம்பளி ஹாலில் மகாத்மாஜியின் உருவ படத்தை திறந்துவைத்து ராஜாஜி பேசுகிறார்.



மியூஸியம் தியேட்டரில் நடந்த ஸேவா சமாஜ கூட்டத்[illegible]



பங்களூரில் ராஜாஜி மாதர் சங்கத்தில் பேசினர். சங்க நிர்வாகியி_ம் அவர் ஏதோ சந்தேக நிவர்த்தி தேடிக்கொண் டிருக்கையில் எடுத்த படம்.



கவர்னர் ஜெனரல் ராஜாஜி பங்களூர் லால்பாக் 'கிளாஸ் ஹவு'ஸில் பேசுகையில் எடுத்த படம். மைசூர் பிரதம மந்திரி ஸ்ரீ கே. ஸி. ரெட்டி ராஜாஜியின் பிரசங்கத்தை மொழிபெயர்க்கிருர்.

பங்களூரில் ராஜாஜி பெண்கள் கூட்டத்துக்குச் செல்லுகையில் அவருக்கு அனைவரும் ஒன்றுகூடி வணக்கம் செலுத்தினர்.



சென்றவாரம் மைசூரில் கவர்னர் ஜெனரல் ராஜாஜிக்கு ஏகப்பட்ட அலுவல்கள். மைசூர் மகாராஜா அளித்த தோட்டக் கச்சேரியில் ராஜாஜி கலந்துகொண்டபோது எடுத்த படம்.

சந்தேகம் தீர்ந்தது

வை. ராமனாதன்

சபேசன் தன் மாமா வீட்டுக்கு வந்திருந்தான். பி. ஏ. பரீட்சை எழுதிவிட்டு லீவுக்கு மாமா ஊருக்குப் போகவேண்டுமென்று ஏற்கனவே திட்டம் போட்டுவிட்டான். ஊருக்கு வந்து இரண்டு நாட்கள்வரை அவனுக்குப் பொழுதே போகவில்லை. பேச்சுத் துணைக்குச் செவிட்டு மாமியைத் தவிர வேறு யாருமில்லை. அவன் மாமா ஒரு வாரமாக ஊரிலில்லை. ஏதோ அலுவலாக வெளியூர் சென்றிருந்தார். ஆகையால் அவன் தன் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தான். வெளியில் போவதற்கும் பிடிக்கவில்லை.

இரண்டு நாள் வரைதான் அவனுக்கு இத்துன்பம். மூன்றாம் நாள் காலையில் மாமா வந்துவிட்டார். அதைவிட சபேசனுக்கு ஆர்வத்தையளித்த விஷயம் என்னவென்றால் எதிர்வீட்டில் அவன் மனதைக் கொள்ளை கொண்ட ஒரு ரம்பை இருந்தது தான். அவள் யார்? இரண்டு நாளாக இல்லாமல் இப்பொழுது திடீரென்று வந்து அவன் மனதை மயக்கிவிட்டாளே! ஊருக்கு வருமுன் சபேசன் மாமா வீட்டில் அதிகநாள் தங்கக்கூடாது என்று எண்ணிக்கொண்டுதான்வந்தான். ஆனால் இப்பொழுதோ அவன் எண்ணம் திடீரென்று மாறிவிட்டது. மாமா இரு என்று ஒரு வார்த்தை சொல்லவேண்டியதுதான்! தட்டாமல் இருந்துவிட அவன் தயார், இதற்கெல்லாம் காரணம் யார்? இவள்தானே!

ஏறக்குறைய இதே நிலையில் தானிருந்தாள் கல்யாணியும். சபேசனைத் தற்செயலாகப் பார்த்தபொழுது அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருந்ததால் நாணத்துடன் திரும்பி உள்ளே சென்றுவிட்டாள். ஆனால் அடிக்கடி அந்த உள்ளே வருவதும் போவதுமாகவே இருந்தாள். அந்த உள்ளேயே இருந்து கொண்டிருந்தால் மற்றவர்கள் என்ன நினைத்துக்கொள்வார்களோ என்னவோ என்ற பயம் போலும்.

அவளுக்கு வயது சுமார் பதினெட்டிருக்கும். சிவந்த மேனி. கருகரு வென்றிருக்கும் நீண்ட சுருண்ட கூந்தல், அவள் நெற்றியில் ஒரு கொத்து மயிர்ச்சுருள் அடிக்கடிப் புரண்டு ஊசலாடிய வண்ணமிருந்தது. அது அவள் வனப்பை இன்னும் சோபிக்கச் செய்தது. இப்படிப்பட்ட மோகினியைக் கண்டு யார்தான் மயங்காமலிருக்கமுடியும். சபேசனின் தாயார் அடிக்கடி அவனிடம் இவன் கலியாணப் பேச்சை எடுப்பின் அவன் அதை லட்சியம் செய்வதில்லை. ஆனால் இந்த மோகினியைக் கண்டவுடன்தான் தாயார் அடிக்கடி கூறிவந்த விஷயம் எவ்வளவு முக்கியமானது என்பது அவன் உணர்வுக்கு வந்தது.

* * * * *

2

காபி சாப்பிட்டபிறகு அறையில் உட்கார்ந்துகொண்டிருந்தான்''என்னடா சபேசா! எப்போ வந்தே ஊர்லேருந்து. பரீட்சையெல்லாம் எந்தமட்லே யிருக்கு.'' என்று கேட்டுக்கொண்டே வந்தார் மாமா. ''முந்தாநாள் தான் வந்தேன் மாமா! பரீட்சையெல்லாம் வெளுத்துக்கட்டியிருக்கிறேன். பாஸ் ஆகுமோ ஆகாதோ என்ற கவலையே வேண்டாம் நிச்சயம் பாஸாயிடும்'' என்றான் சபேசன்.

''ஊரில் எல்லோரும் க்ஷேமந்தானே என்று கேட்டுவிட்டு ஆமாம் நீ ஏன் எங்கேயுமே போவதில்லையாம்? உள்ளேயே அடஞ்சு கிடக்கியாமே! அம்மாமி சொல்றாளே. இப்போ வா! வெளியிலே போயிட்டு வருவோம். காத்தாட போயிட்டு வந்தாத் தானேடா உடம்பு வியாதி வெக்கை யில்லாமேயிருக்கும், எழுந்திரு வா போயிட்டு வருவோம்! என்றார். அரை மனதுடன் அவரைப் பின் தொடர்ந்தான் சபேசன். வாசலில் வந்து நின்றபடியே எதிர் வீட்டு ஜன்னல் பக்கம் பார்த்தான். நிலைக் கண்ணாடி முன் நின்று கொண்டு தன் நீண்ட கூந்தலை வாரிக்கொண்டிருந்தாள். அவன் ஒருகணம் நின்று பார்த்தபடி இருந்துவிட்டு மறு கணம் மாமாவுடன் வெளியே செல்ல வாரம்பித்தான்.

* * * * *

3

இப்பொழுதெல்லாம் சபேசனை அவன் மாமா வலுக்கட்டாயமாக வெளியில் அழைத்துக் கொண்டுபோய்விடுவார். ஒருநாள் மாலை மணி 5 இருக்கும். ''இன்று சினிமாவிற்குப் போய் வருவோம் வாயேன் சபேசா'' என்று மாமா அவனைப் பார்த்துக் கூறினார். ''போய் விட்டு வந்தால் போச்சு'' என்றான் பதிலுக்கு. இப்படிச் சொல்லி விட்டானே தவிர அறையை விட்டு வெளி வருவதில் இஷ்டமில்லைதான் அவனுக்கு. ஏதோ வாயில் வந்தது, கூறிவிட்டான். காபி சாப்பிட்ட பிறகு இருவரும் சினிமாவிற்குக் கிளம்பினர்.

சினிமாக் கொட்டகையில் இருவரும் இரு நாற்காலிகளில் அமர்ந்தனர். படம் ஆரம்பிக்க இன்னும் அரை மணி நேரம் இருந்தது. கையில் எடுத்துக் கொண்டு வந்த ஒரு புத்தகத்தைப் பார்த்தபடி இருந்தான் சபேசன். மங்கிய வெளிச்சத்தில் படிக்க முடியவில்லை. இருந்தாலும் அரை மணியை ஓட்டியாக வேண்டுமே! ஏட்டைப் புரட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

மணி அடித்தது! அதைத் தொடர்ந்து விளக்குகளும் அணைந்தன. திடீரென்று மணியடித்தவுடன் தலை நிமிர்ந்த சபேசன் விளக்கு அணையும் சமயத்தில் தங்களுக்கு முன் வரிசையில் நேர் எதிராக இருந்த நாற்காலியில் ஒரு பெண் உட்கார்ந்திருப்பதைப்



பார்த்தான். அசைப்பில் பார்த்த அவனுக்கு எதிர் வீட்டுப் பெண்ணின் ஞாபகம் உடனே வந்தது. ‘ஒருகால் அவளே தானோ என்னவோ? என்று நினைத்தவாறே படத்தைக் கவனிக்க ஆரம்பித்தான். ஆனால் படத்தில் மனம் ஓடவில்லை. அந்தப் பெண்ணின் ஞாபகம் வந்து நின்றது. படத்தில் வரும் பெண்களெல்லாம் அவளாகத் தான் அவன் கண்களுக்குத் தெரிந்தது. எப்பொழுது விளக்குப் போடப்படும் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். படம் சற்றுப் பெரிதாகையால் மூன்று ரீல்கள் தொடர்ந்து ஓடிய பிறகுதான் ‘இண்டர்வெல்’ வந்தது.

விளக்குகள் ஏற்றப்பட்டன. அதைத் தொடர்ந்து சோடா முதலியவைகளை விற்பவர்களின் குரலும் ஏககாலத்தில் கிளம்பிக் கொட்டகை முழுவதும் பரவியது. அவைகளொன்றும் சபேசன் காதில்விழவில்லை. எப்போது விளக்கு ஏற்றப்படும் என்று எதிர்பார்த்தவன் விளக்குகள் ஏற்றப்பட்டவுடன் முன் வரிசையில் நேர் எதிராக இருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்த பெண்ணின் மேல் தன் கண்ணோட்டத்தைச் செலுத்தினான். என்ன ஆச்சரியம்! தான் நினைத்தபடி அவள், ‘அவளாக’வே இருந்தாள். நல்லவேளை அன்று சாயந்திரம் சபேசன் வாயிலிருந்து ‘நான் சினிமாவிற்கு வரவில்லை’ என்ற வார்த்தைகள் வாராமலிருந்தனவோ அவன் பிழைத்தானோ! ஆனால் அதோ! அவன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் யுவன் யார்? அவனுடன் அவள் அடிக்கடிப் பேசுவதும் பிறகு கலீரென்று சிரிப்பதுமாக இருந்தாள். அவன் யார்? ஒருகால் அவளுக்கு விவாகமாகிவிட்டதோ? அவன்தான் அவள் கணவனோ...? சபேசனுக்குத் தான் முன்னிருந்த மனிதர்கள் நாற்காலி, பெஞ்சுகள், விளக்குகள் உள்பட யாவும் சுழல்வது போல் தோன்றின. வெளிச்சமிருந்ததெனினும் ஏதோ ஒரு இருட்டறையில் தானிருப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவனுக்குத் தான் எண்ணியபடியே இருந்துவிட்டால்......!

"படம்! எப்படி" என்று மாமா கேட்டதுகூடக் காதில் விழவில்லை அவனுக்கு. "என்னடா சபேசா என்ன! முழித்தபடியே தூங்குகிறாயா என்ன' என்று கூறிக்கொண்டே அவன்பார்த்த திசையில் அவரும் பார்த்தார். விஷயம் விளங்கிவிட்டது அவருக்கு. அது கிடக்கு சபேசா நான் கேட்டேனே! படம் எப்படி?" என்றார் மறுபடி. தேவலை! சுமார் தான் என்றான் சபேசன். உண்மையில் அது நல்ல படம் தான். ஆனால் சபேசன் அதைக் கவனித்திருந்தாலல்லவோ தன் அபிப்பிராயத்தை சரியாக வெளியிடுவதற்கு? ஏதோ கூறிவைத்தேன். மாமா உள்ளுக்குள் சிரித்துக்கொண்டார்.

* * * * *

4

மறுநாள். வாசல் பக்கத்து அறையில் உட்கார்ந்திருந்த சபேசன் மணியா, வா! வா! என்று யாரையோ தன் மாமா அழைக்கும் சத்தம் கேட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். அவர் அவனிருக்கும் அறைக்குள் நுழைந்தார். நாற்காலியை இழுத்துப் போட்டு அந்த 'மணி'யை உட்காரச்செய்தார். சபேசனுக்கு ஆச்சரியத்தை விளைவித்த விஷயம் என்னவெனில் அந்த 'மணி' தான் நேற்று சினிமாக் கொட்டகையில் கண்ட யுவனாக இருந்தது தான்.

"இதுயார் தெரியுமோ? சபேசா!" எதிராத்து மாமாவுடைய பிள்ளை. மெட்ராஸில் காலேஜில் படித்துக்கொண்டிருக்கிறான். நேற்று சாயந்திரம் தான் வந்தானாம். லீவுக்காக வருவது வழக்கம் என்றார் அவன் மாமா. அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்விக்கப்பட்டார்கள். ஏதேதோ விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். பிறகு அவன் 'வருகிறேன்' என்று கூறிவிட்டு எழுந்து சென்றுவிட்டான்.

அவன் சென்றபிறகு சபேசன் மாமாவிடம் "இவனுக்கு என்ன கல்யாணமாகி விட்டதுபோலிருக்கிறதே"? என்று கேட்டான். மாமா இடிஇடி என்று சிரிக்க ஆரம்பித்துவிட்டார். சபேசா உன்னைப் போன்ற சாதுர்யமாகப் பேசுபவர்களை நான் பார்த்ததேயில்லைடா! என்ன லாவகமாகப் பேசுகிறாய்! ஒரு கல்லால் இரண்டு மாங்காய் அடிக்கப் பார்க்கிறாய்? சுற்றி வளைத்துக் கேட்பானேன். அந்தப் பெண்ணுக்குக் கலியாணமாகிவிட்டதா என்றே கேளேன்? நேற்று சினிமா கொட்டகையில் இந்தச் சந்தேகம் வந்ததோ?' உனக்கு என்றார்.

சபேசன் சிரித்துக் கொண்டான். கவலைப்படாதேடா. இன்னும் அந்த மணிக்கு —பெண் மணிக்குக்—கல்யாணமாகவில்லை. அவன் அவளுடைய அண்ணாதான். ஆகையால் நீ முன்போலச் சந்தோஷமாகவே இரு". என்றார்.

பழைய பேப்பர் வாங்குபவர் நெ, 1:-"ஏம் பெரியவரே! காலையிலே எப்படி இவ்வளவு பெரிய கிராக்கியை புடிச்சீங்க...... ?"

ப. பே. வா. நெ. 2:—நீ பொழைக்கத் தெரியாதவன் தம்பி! அடுத்த தெருவுலே ஒருத்தர் புது பத்திரிகை ஒண்ணு ஆரம்பிச்சிருக்காரே, உனக்குத் தெரியாது அப்பேன்?

★ ★ ★ ★

5

அன்று சாயந்திரம் மாமாவுடன் ஆற்று மணலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான் சபேசன். மணியும் கூட இருந்தான், "மணி இவனுக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது இன்றைக்கு. நேற்று அண்ணனும் தங்கையுமாகப் பக்கத்தில் பக்கத்தில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தீர்களே. ஒருகால் சதி-பதிகளோ என்று நினைத்துப் பயந்தும் விட்டான் பையன். எப்படியிருக்கிறது' கதை?' என்றார்.

"போங்கள் மாமா! உங்களுக்கு எப்பொழுதும் பரிகாசம்தான் என்றான் சபேசன். பிறகு மணி பேசினான். "அவர் கிடக்கிறார் விட்டுத்தள்ளுங்கள் சார். நீங்கள் இனிமேல் கவலைப்படாதபடிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டியது எங்கள்பொறுப்பு. நாளைக்கே அப்பாவிடம் சொல்லிக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்துவிடச் சொல்கிறேன்" என்றான். சபேசன் மாமா குபீரென்று சிரித்துவிட்டார்.

நேரமான பிறகு எழுந்திருந்து வீட்டைப் பார்க்க நடந்தனர் மூவரும்.

தற்போது சபேசன் தன் கல்யாணியுடனும் குழந்தை சங்கரனுடனும் இன்ப வாழ்வு நடத்தி வருகிறான். குழந்தையின் மழலையில் இருவரும் மனதைப் பறிகொடுத்துத் தங்களை மறந்திருக்கிறார்கள்.

———

சின்னக் காரியமாகட்டும்; பெரிதாகட்டும் அதை நடத்த வேண்டிய இடத்தில் நடத்திக் காட்டினால் தான் செய்யும் காரியத்துக்கு சிறப்பேற்படுகிறது. இதற்கு முக்கியமாக விளங்குவது சன்னிவேசம்—அதாவது சூழ் நிலைமை. சென்றவாரம் மயிலாப்பூர் ரஸிகரஞ்சனி சபையார் "கோமதியின் காதலன்" என்ற நாடகத்தைத் திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப்பைச் சேர்ந்தவர்களைக் கொண்டு இரண்டு நாட்கள் தொடர்ந்தாப்போல் நடிக்கச் செய்து தங்கள் அங்கத்தினர்களைக் களிக்கச் செய்தார்கள். இந்த நாடகம் இதுவரை எவ்வளவோ இடங்களில் எவ்வளவோ தடவை நடிக்கப்பட்டு நல்ல பெயர் பெற்றிருக்கிறது. இருந்தாலும், கலாபிமானிகள் நிறைந்த மயிலாப்பூர் டிவிஷனில் கலையார்வம் அதிகம் கொண்ட திருவல்லிக்கேணிக் கழக அமெச்சூர்கள் இந்நாடகத்தை நடித்தது தனி விசேஷம் தான். இந்த நாடகத்தில் நடித்தவர்களை 'அமெச்சூர்கள்' என்று சொல்வதற்கு சிலர் ஆட்சேபம் கொள்ளலாம். அதற்கு நியாயமுண்டு. நடிப்பையே தொழிலாககொண்டு எண்ணற்ற மேடைகளைப் பார்த்த நடிகர்களுக்குத் தாங்கள் எவ்விதத்திலும் பிற்பட்டவர்கள் அல்ல என்பது போலல்லவோ அவர்கள் நடித்தார்கள்!

"கோமதியின் காதலன்" நாடக மேடையில் பிரசித்தமடைந்ததென்பதும், இதை 'ஆனந்தவிகடன்' ஸ்ரீ மகாதேவன் அற்புதமாக மேடையில் நடிக்க வகை செய்திருக்கிறார் என்பதும்

'கோமதியின் காதலன்'

★

பழைய விஷயங்கள். ஆனால் ஒரு புது விஷயம். இதற்குமுன் பன்முறை, பல விடங்களில் நடிக்கப்பட்ட இதே நாடகம் இம்முறை மயிலையில் இணையற்ற வகையில் உயர்வுற்றது.

நடிகர்கள் ஒவ்வொருவரும் நல்ல பெயர் பெறும் ஆவலில் அந்தரங்க சுத்தியாகவும், இயற்கையோடும், சுயேச்சையாகவும் நடித்தார்கள். பிரணதார்த்தியாகத் தோன்றியவரின் (ஸ்ரீ என். எஸ். நடராஜன்) நடிப்பு ரஸிகர்கள் கவனத்தை மிகக் கவர்ந்தது. அவரது 'நறுக்'கான பேச்சும், குரல் அசைப்புக்களும் சபையோர் குதூகலத்துக்குப் பெரிதும் காரணமாயிருந்தது. கோமதியாகத் தோன்றியவர் (ஸ்ரீ. ஸ்ரீனிவாஸகோபாலன்) உருக்கமாகவும், உணர்ச்சி தோன்றவும் நடித்தார். ரங்கராஜன் பாத்திரத்தை ஏற்ற ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமியைப்போல அவ்வளவு கலகலப்பாகவும் இயற்கையாகவும் நடிப்பது மிகவும் சிரமம். நடிப்பிலேயே திறமையை துலங்கச்செய்யும் அவருக்குப் பாடும் சந்தர்ப்பத்தைத் தராதிருந்திருக்கலாம். ஆனால் நாடகமென்றால் பாட்டுக்கள் சில வேணும் வேண்டித்தானே இருக்கின்றன?

மதராஸ் மணியாகத் தோன்றியவர், பொன்னாயி, தத்தாத்ரி, கான்ஸ்டேபிள் ஐயா, உருளைக்கிழங்கு வியாபாரி முதலிய ஒவ்வொருவரும் சக்கைபோடு போட்டுவிட்டார்கள்.

புதிய இசைத் தட்டுகள்

சுதந்திர தின வெளியீடாக ஹிஸ்மாஸ்டர்ஸ்வாய்ஸ் கம்பெனியார் இரண்டு வகையான இசைத் தட்டுகளை வெளியிட்டிருக்கின்றனர். இரண்டு இசைத் தட்டுகளில் ஸ்ரீ. தண்டபாணி தேசிகர் காந்திஜியின் சரிதைச் சுருக்கம் பற்றிய பாடல்களைப் பாடியிருக்கிறார். இப்பாடல்களை சுவை நிறைந்த, சரளமான தமிழில் "சுரபி" (ஸ்ரீ தங்கவேலு) அவர்கள் அமைத்துக்கொடுத்திருக்கிறார். சுலபமாகவுள்ள மெட்டுக்களில் ஸ்ரீ தேசிகர் இப்பாடல்களை ரஸித்துப்பாடியிருக்கிறார்.

ஸ்ரீமதி யதுகிரி குமாரி காந்திஜி சரித காலட்சேபம் செய்திருக்கிறார் 4 ரிகார்டுகளில். ஹரி கதை பத்ததியில் அமைந்த ரிகார்டுகள் இவை. ஊசி சரவெடிகள் பொரிந்து தள்ளுவதுபோல படபடவென்று பாட்டும், வசனமும் ஒன்றையொன்று மிஞ்சும் வகையில் வெகு விருவிருப்பாகப் பதிவாகியிருக்கின்றன இவ்விசைத் தட்டுகள். இந்த வேகம் கதா காலட்சேபத்தில் பிரயோகமாகும் சொல் அடுக்குகளை நிதானமாகச் செவியுற முடியாமல் செய்கிறதென்றாலும், காந்திஜி பற்றிய வரலாறுகளைத் தெரிந்து கொண்ட நமக்கு கதைப் போக்கைச் சுலபமாகத் தெரிந்து கொள்ளமுடிகிறது. காலட்சேபத்தை நேரில் கேட்பதுபோன்ற உணர்ச்சியை இவ்விசைத் தட்டுக்கள் கொடுக்கின்றனவென்பதை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

மன்னனை ஆண்ட மங்கை

ஸ்ரீமதி லட்சுமி அம்

இதுவரையில் ...

[எட்டாம் நூற்றூண்டிலே ராஜஸிம்ம பாண்டியன் ஒரு சக்கரவர்த்தியாக ஆட்சி செலுத்தி வந்தான். இவன் கங்கராஜனை வென்று அவனுடைய மகளான பூசுந்தரியை மணந்து பட்ட மகிஷியாக்கிக்கொண்டிருந்தான். தெற்கே சேரனையும் வென்று தயாள குணத்துடன் அவனுக்கு வேண்டிய உதவிகளும் செய்திருந்தான். எனினும், சேரன் பாண்டிய சக்கரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்து கன்னியாகுமரியை ஒட்டியிருக்கும் நாஞ்சில் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். பாண்டியன் மீண்டும் படையெடுத்துப் போய் சேரனை அடக்கி, அவனிடம் மறுபடியும் தயாளமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவனைத் தனக்கு ஒரு சேனுபதியாகவும், மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான். சேரனே கெட்ட எண்ணத்தை விட்டுவிடவில்லை. ஒரு பௌத்த பிட்சுவுடன் சூழ்ச்சி செய்து, பாண்டிய வீர மன்னனுக்கு அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்யும் வியாஜத்தால், பாண்டி நாட்டில் குழப்பம் உண்டாக்கவும், பாண்டியனுள்ளத்தைக் கெடுக்கவும் முயல்கிறுன். இந்நிலையில் இராஜ புரோகிதரான செல்வநம்பி ஒரு பண்டித சபை கூட்டி, மன்னனுக்கு ஆறுதல் அளிக்க எத்தனிக்கிறுர். இச் சபைக்கு எப்படியாவது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணுசித்தரை அழைத்து வரவேண்டுமென்று அரசனும், அரசியும், ஒருவருக்கொருவர் தெரியாத நிலையில் மாறுவேடம் பூண்டு போய்க் காரியசித்தி பெறுகிறுர்கள். இது பௌத்த பிட்சு முதலானவர்களுக்குப் பொருமையுண்டாக்குகிறது.]

20

கலகத்திற்குப் பல்லாண்டு !

பாண்டிய மன்னன் பண்டித மகா சபையின் நடவடிக்கைகளிலும், விஷ்ணுசித்தரை உபசரிப்பதிலும், பொற்கிழி அறுத்தபின் விழாக் கொண்டாடுவதிலும் முழுக்க முழுக்க ஈடுபட்டிருக்கும் இதே சமயத்தில், பன்றிமலையில் கலகங்கள் ஏற்படும் என்பது தெரிந்திருந்ததால், மாறங்காரியின் ஆலோசனைகளுக்கிணங்கத் தளபதி வில்லி அக்கலகங்களை அடக்குவதற்குத் தயாராயிருந்தான்.

வில்லி பன்றி நாட்டுக்குப் புறப்படுவதற்கு முன், தன்னை வந்து பார்த்துப் போகும்படி ராணி பூசுந்தரி அவனை வேண்டிக்கொண்டிருந்தாள். ஆனல், அவள் வித்வத்சபை வைபவத்தில் ஈடுபட்டிருக்கும்போது எப்படிச் சந்திப்பது? வில்லி இதுகுறித்துத் தன் காரியாலயத்தில் ஆலோசனை செய்துகொண்டிருக்கையில் ஒரு குதிரை வீரன் வேகமாக வந்து வாசலில் நின்றுகொண்டு மகாராணி அனுப்பிய தூதன் வந்திருப்பதாகச் செய்தி சொல்லி அனுப்பினுன். உடனே வரும்படி வில்லி அனுமதித்தான்.

'என்னப்பா! மகாராணி கொடுத்த கடிதம் எங்கே?'

"மகாராணி கடிதம் கொடுத்ததாக நான் சொல்லவில்லையே, யஜமான்!"

வில்லி திகைத்துப்போனுன், குதிரை வீரன் பேசிய தோரணையைக் கண்டு தான் குனிந்து மந்திரியாரின் கடிதமொன்றைப் பார்த்துக்கொண்டே குதிரை வீரன் முகத்தையும் பாராமல்தான் வில்லி தன் முதலாவது கேள்வியைக் கேட்டான். அந்த எதிர்பாராத பதிலைக்கேட்டு முகத்தையும் பார்த்ததும் ஏற்பட்ட திகைப்பை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, 'கடிதம் இல்லாவிட்டால் நான் மகாராணியின் செய்தியை எப்படித் தெரிந்து கொள்வது? ஏன் என் பொழுதை வீணுக்குகிறுய்? விரைந்து சொல் அல்லது விரைந்து செல்' என்று கண்டிப்பாய்ப் பேசினுன் வில்லி.

வில்லி அதட்டிப்பேசியும் குதிரை வீரன் பயப்படவில்லை. 'என்ன, தளபதியாரே! என்

ளைப் பயமுறுத்தி பயனென்ன? எதிரிகளை யல்லவா பயமுறுத்தவேணும்? மகாராணியின் செய்தியை நானே தெரிவிக்கப் போகிறேன்' என்று சிரித்தான் குதிரைவீரன். அந்த முகத்தை உற்றுநோக்கிக் கொண்டிருந்த வில்லியின் சந்தேகங்களை ஒரேயடியாகத் தெரிவித்துவிட்டது குதிரை வீரன் சிரிப்பு.

வில்லி வெகு மரியாதையுடன் எழுந்து நின்று, 'மன்னிக்கவேணும் மகாராணியே!' என்றான். ஆம், அக் குதிரைவீரன் வேறு யாரும் இல்லை, ஆண் உடையில் குதிரைமீது வந்த பூசுந்தரி தேவிதான்.

'நானா மன்னிக்கவேண்டியவன்? நீங்களல்லவா என்னை மன்னிக்கவேணும் தங்களை இப்படித் திகைக்க வைத்துத் தங்களுடைய காலத்தையும் கொஞ்சம் வீணாக்கியதற்காக?. ஆனால், நான் இப்படி வந்திராவிட்டால், வேறு எப்படித் தங்களைச் சந்தித்திருக்க முடியும்? அரசருக்குக் கூடத் தெரியாமல் இப்படி வந்துவிட்டேன். செய்தி சொல்லிவிட்டு விரைவில் போய் மறுபடியும் சபையில் அரசர் பக்கத்தில் இருக்க வேணும்'

'சரி, மகாராணியே! அந்தக் கலகக்காரர்களின் கலகங்களை அடக்குவது விரைவில் ஆகக்கூடிய காரியம் அன்று. மக்களில்பலரும் அவர்களில் பலரையும் உண்மையான சன்னியாசிகள் என்றே நம்புகிறார்கள். ஆகவே, இக் கலகங்களை அடக்குவதில் நமது பொது ஜனங்களின் ஒத்துழைப்பு நமக்குக் கிடைப்பது சிரமமாகவே இருக்கிறது. எனினும் நான் நமது பெரும்படையொன்றை தளந்தளமாகவகுத்து, ஒவ்வொன்றுக்கும் தனித் தனியேகலகங்களை அடக்குவதில் வல்லவர்களான தளபதிகளை ஏற்படுத்தியிருக்கிறேன். சரி, என் திட்டத்தையல்லவா சொல்லுகிறேன்? தாங்கள் சொல்ல வந்தது என்னவோ?'

'நானும் இது குறித்துத் தான் பேசி, என் அபிப்பிராயங்களையும் தெரிவிக்க விரும்பினேன். இந்தத் துறையில் நிபுணரான தங்களுக்கு நான் விசேஷமாக என்ன சொல்லப் போகிறேன்? அவர்களை எப்படியாவது இந்தத் தடவை முறியடித்துத் துரத்திவிட வேண்டும். ராஜத்துரோகிகளான தலைவர்களைப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

'தளபதிகள் செல்ல வேண்டிய பன்றி நாட்டுப் பகுதிகளை வகுத்துக் காட்டியிருக்கிறேன். இன்ன இன்ன இடங்களுக்கு இப்படி இப்படிப் போய் வலை விரித்ததுபோல் விரித்து' வடிகட்டி முக்கியமான ராஜத்துரோகிகளையெல்லாம் பிடித்துக்கொண்டு வரவேண்டும் என்று கட்டளையிட்டு, அத்தளபதிகளை அனுப்பி வைத்திருக்கிறேன்'

'அவர்கள் தங்களுடைய திட்டப்படியே வெற்றியடைவார்களென்று எண்ணுகிறீர்களா?'

'நான் அப்படி ஒன்றும் சொல்லவில்லையே; கலகக்காரர்கள் வெல்லற்கு அரியவர் என்ற எண்ணத்துடன் அல்லவா திட்டங்களை விரித்துக்கொண்டிருக்கிறேன்? நான் காத்திருந்தேன். நானும் உடனே புறப்பட்டுப் போக வேண்டியதுதான்.'

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே வேறொரு குதிரையின் காலடிச் சத்தம் கேட்டது. 'வேறொரு குதிரை வீரனா? அந்த ஆண் உடை தரித்த ஆசாமி வருவதற்குள் நான் செய்தி சொல்லிப் போய்விடுகிறேன்' என்றாள் பூசுந்தரி தேவி. ஆனால், அக்குதிரை வீரன் குதிரையை வாசலில் நிறுத்திவிட்டு உள்ளே மடமடவென்று வந்துவிட்டான்.

'தங்கள் அனுமதி இல்லாமலே காவற்காரன் அவனை உள்ளே விட்டுவிட்டான்—' என்றாள் மாறுவேடத்திலிருந்த மகாராணி.

'ஏதோ ஆபத்து வந்துவிட்டது; நான் இப்போதே புறப்படவேண்டியதுதான்' என்று வில்லி சொல்லிக்கொண்டிருக்கும்போதே, வந்த வீரன் வில்லியின் அடிகளில் பணிந்தெழுந்து, 'காத்தான் வசம் தாங்கள் பழனிமலைச் சாரலை நோக்கி அனுப்பியிருந்த படை கூர்மையான அரிவாளிடம் சிக்கிக்கொண்ட பயிர்போல் கரகரவென்று எதிரிகளால் அறுத்துத் தள்ளப்பட்டது' என்று செய்தி சொன்னான்.

'வித்வத் சபை நடைபெறும் இச்சமயத்தில் எவ்வளவு கெட்ட செய்தி!' என்று கொதிப்படைந்தாள் மகாராணி.

வில்லியோ அமைதியாக, 'தங்கள் உள்ளத்தில் ஆறுதல் மிகவும் அவசியமானது. கொஞ்சங்கூடக் கவலைக்குக் காரணம் இல்லை. கானல் பாடிக் காத்தானின் படை எண்ணிறந்த எதிரிகளால் சூழ்ந்து கொள்ளப்பட்டிருக்கவேணும், இல்லாவிட்டல் அவனை ஜயித்திருக்க முடியாது. அவன் அகப்பட்டிருக்கமாட்டான் என்பதும் என் நம்பிக்கை. இன்னும் வேறு தளபதிகளும் போயிருக்கிறார்களல்லவா? கறுப்பங்காட்டுத் திம்மனும் பழமலைப் பொம்மனும் எப்படிப்பட்ட கலகக்காரர்களையும், சமாளிக்கக்கூடியவர்கள். செங்காட்டு வேலன் அவர்களுக்குக் காலனாகி, ஆயிரக்கணக்கான எதிரிகளைப் பரலோகம் சேர்த்திருப்பான். பெருங்குன்றத்துப் புலியனும் சீயனும் பெருவீரத்துடன் ராணுவத் தந்திரங்களும் தெரிந்தவர்கள். புளியங்காட்டுத் தித்தனும் அரசடி ஆந்தையும் ஆலங்கமாட்டுச் சென்னியும் பன்றிமலைப் பிரதேசங்களையெல்லாம் துருவித்துருவி எதிரி வேட்டையாடக்கூடியவர்கள். மகாராணியே! தங்கள் செய்தியை விரைவில் சொல்லிவிடுங்கள். நான் இதோ புறப்படுகிறேன்' என்றான்.

அதற்கு மகாராணி 'தாங்கள் செய்திருக்கும் ஏற்பாடுகளின் சிலாக்கியத்தைக்குறித்து எனக்கு ஏதாவது சந்தேகம் இருக்கமுடியுமா? எனினும் எதிரிகள் நீண்ட காலமாக வஞ்சகமாய் ஆயத்தம் செய்து வந்திருப்பதால், இக்கலகங்களை அடக்கும் முயற்சியும் சிறிது நீடித்து நடைபெற்றுத்தானே வெற்றி தரக்கூடும்? அது இருக்கட்டும். வித்வத் சபை வைபவங்களெல்லாம் முடிந்த பின்பு நானும் அங்கு வந்து தங்களைச் சந்திப்பேன்' என்றாள்.

'போர்க்களத்திற்கா தாங்கள் வரப் போகிறீர்கள்? ஆபத்தல்லவா?' என்று ஆச்சரியத்துடன் பதில் சொன்னான் வில்லி.

'ஆம், வில்லியாரே! இதே வேடத்தில் அங்கு நான் வருவேன். போரில் கலந்துகொள்ள விரும்பினாலும் தாங்கள் அனுமதிக்க வேண்டும், தடை சொல்லக்கூடாது' என்றாள் மகாராணி, வேண்டுகோளும் கட்டளையும் கலந்து தொனிக்கும் தோரணையில்.

மகாராணி குதிரையேறிப் போய்விட்ட பின்பு, 'என்ன ஆச்சரியமான வீரப் பெண்மணி இவள்!' என்று எண்ணிக்கொண்டே வில்லி பொறுக்கியெடுத்த குதிரைப்படை வீரர்களுடன் பன்றி நாட்டை நோக்கிப்புறப்பட்டான். சிறந்த வில்லாளர்களையும் பொறுக்கியெடுத்துத் திறமையான ஒரு தளபதியின் தலைமையில் தன்னைப் பன்றிநாட்டில் சந்திக்கும்படி வேறொரு வழியாக அனுப்பி வைத்தான்.

* * * *

விஷ்ணுசித்தரின் விஜயத்தையும் ஊர்வலத்தையும் பார்த்துவிட்டுச் சேரன் பன்றி நாடு போவதற்குள், பாண்டிநாட்டின் அப்பகுதி முழுவதும் கலகக்காரர்களின் வசமாகிவிட்டது. அங்கங்கேயிருந்த ராஜ சைனியங்கள் நிர்மூலமாக்கப்பட்டன. அந்த வெற்றிக் கிறுகிறுப்பால் சன்னியாசிகள் செய்த அநீதிகள் பல. அப்பகுதியில் வசித்த குடிஜனங்களில் பலரையும் நயமாகவும் பயமாகவும் சைவவைணவ மதங்களைத் துறக்கச் செய்து, பௌத்த மதத்தைத் தழுவச் செய்தனர். சைவவைணவ சமயங்களை இழிவுபடுத்திச் சன்னியாசிகள் மக்களுக்குப் பிரசங்கங்களும் செய்யத் தொடங்கினார்கள்.

அந்தக் கலகக்காரர்களின் ஆட்சியிலே பழனி முருக வழிபாட்டிற்காக ஒருவன் கடைக்குப் போய்த் தேங்காய் பழம் வாங்கிக்கொண்டிருந்

தான். அது கண்ட பௌத்த சன்னியாசி ஒருவன் அவனை நோக்கி, 'நீ ஆலயத்திற்குப் போகிருயோ?' என்று கேட்டான்.

'ஆமாம்.'

'அங்கே என்ன செய்வாய்?'

'பிரார்த்தனை செய்வேன்.'

'பிரார்த்தனையா? பிரார்த்திக்காதே! அது அதன் செவியில் விழாது!" என்று கருணைக் கடலான பெரியோர்கள் கூறியிருக்கிருர்களே!'

'எங்கள் பெரியோர்கள் அப்படிச் சொல்லவில்லை; எங்கள் முருகனுக்குக் காது கேட்கும். அப்பெருமான் அடியார்களின் பிரார்த்தனைகளைத் திருச்செவியில் போட்டுக்கொள்வான்.'

இதுகேட்ட சன்னியாசி, 'முருகன் கள்ளனை திருமால் மருகன்; பிணங்கண்டு பேயோடு கூத்தாடுவோன் மகன்' என்று தூஷிக்கத் தொடங்கினுன். உடனே முருகக்கடவுளின் அடியார்களுக்கு மனவருத்தம் அதிகரித்தது. 'வேலும் மயிலும் துணை' என்று சொல்லிக்கொண்டே அவர்கள் பழனி ஆண்டவன் சன்னிதிக்குப் புறப்பட்டார்கள். கலகக்காரர்களோ கோவிலை அடைத்துத் தாளிட்டு, 'இப்போது உங்கள் பிரார்த்தனைகளைத் திருச்செவியில் ஏற்றுங்கள், பார்க்கலாம்' என்று பரிகசித்தார்கள்.

அவர்கள் அஹிம்ஸையின் பெயரால் 'சிவ விஷ்ணு ஆலயங்களில் ஆராதனங்களையும் தடுத்துவிட முயன்ருர்கள். கோவில் வலம் வருவோரைத் தடுத்து, 'இப்படிச் சுற்றிச்சுற்றி நடந்துகொண்டிருப்பதால் சிற்றுயிர்களுக்கு நாசம்தான்; உங்களுக்கோ நன்மை ஒன்றும் இல்லை!' என்ருர்கள். இச்செய்திகளை யாத்திரிகர் மூலமாகப் பூசுந்தரி தேவியும் அறிந்து கொண்டாள்.

இப்படிப் பௌத்தர்களுக்கு நாளுக்கு நாள் செருக்கும் செல்வாக்கும், கலகக்காரர்களுக்கு வலிமையும் வெற்றித் திமிரும் அதிகரித்து வந்தன. இந்நிலையில் சேரனும் வந்து சேரவே, சன்னியாசிகளின் அட்டகாசங்கள் அதிகரித்தன. வேதம் ஓதலும் ஆடல் பாடலும் அறவே ஒழிக்கப்பட்டன.

பன்றிநாட்டுக்குப் பக்கத்திலுள்ள கிராமங்களையும் கலகக்காரர்கள் வசப்படுத்த முயன்ருர்கள். அழுக்கேறிய சொற்ப ஆடையணிந்து, என்று சொல்லிக்கொண்டு கூட்டங் கூட்டமாய்ச் சன்னியாசிகள் வருவார்கள், போவார்கள். போகும்போது அரோக திடகாத்திரமாயிருக்கும் இளைஞர்களையும் தந்திரமாக அழைத்துக்கொண்டு போய்விடுவார்கள். அவசியமானுல் ஆயுதபாணிகளாகவும் போய்க் கிராமங்களைச் சூழ்ந்துகொண்டு? கொள்ளையடித்துச் சேரன் கொடியைப் பறக்க விடுவார்கள். இவற்றையெல்லாம் கண்ட சேரலாதனுக்கு ஒரே குதூகலமாயிருந்தது. அணையும் முன்பு விளக்கு அப்படி ஓங்கி எரியக்கூடும் என்பதை அவன் அறிந்துகொண்டானில்லை.

ஒருநாள் பன்றிநாட்டின் எல்லைப்புறக் கிராமம் ஒன்றுக்கு ஒரு சிறு சன்னியாசிக் கூட்டத்துடன் சேரனும் போயிருந்தான். சன்னியாசிகள் ஆயுதங்களைக் காவிப்பைகளில் ஒளித்து வைத்திருந்தார்கள். அந்தக் கிராம ஜனங்களிற் பெரும்பாலர் விஷ்ணுபக்தர்கள். அவர்கள் அச்சமயம் மதுரை வித்வச்சபையைக் குறித்தும், ஊர்வலம் முதலான வைபவங்களைக் குறித்தும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

கிராமவாசி 1: 'இறைவன் திருவருளை நம்பித்தானே நாம் இந்தக் கிராமத்திலும் இன்றைய நிலையிலும் குடியிருந்து வருகிருேம்? இறைவனருளால்தான் வித்வத் சபையில் விஷ்ணுசித்தருக்கு வெற்றி கிடைத்தது. பாண்டியனும் இறைவனருளால் இந்தக் கலகப்பூண்டை வேரறுத்து நம்மைக் காப்பாற்றுவான் என்று தானே நம்பியிருக்கிருேம்'

கிராமவாசி 2: 'இறைவனருளால் அந்தப் பொற்கிழிகூட விஷ்ணுசித்தரை நோக்கித் தாழ்ந்து வளைந்ததாமே!'

அச்சமயம் அங்கு வந்து சேர்ந்த சன்னியாசி ஒருவனைக் கண்டதும் கிராமவாசிகள் வாயை மூடிக்கொண்டனர். அவனே கிராமவாசிகளின் வாயைத் தூண்ட விரும்பி, 'காற்று கோரமாக வீசியல்லவா பொற்கிழியை அப்படித் தாழ்த்தி வளைந்து திரும்பச் செய்ததாம்' என்ருன்.

ஏதோ சமாதான முறையில்தானே பேசுகிருர். இந்தச் சன்னியாசி என்ற எண்ணத்துடன் ஒரு கிராமவாசி, 'விஷ்ணுசித்தரின் ஊர்வல வைபவத்தைக் காண மரங்களிலும் தொங்கிக்கொண்டிருந்தார்களாம் ஜனங்கள்; வான வீதியிலும் வானவர்கள் மொய்த்திருந்தார்களாம்' என்று செய்தி சொன்னுன்.

அதைக் கேட்டுக்கொண்டே வந்த வேறொரு சன்னியாசி, 'மரங்களில் தொங்கிக்கொண்டிருந்தன வானரங்கள். பூமாலைகளின் மணத்திற்காக

வான வீதியில் மொய்த்தன வண்டுகள்' என்று பரிகசித்தான்.

அப்போது கிராமவாசிகளின் கூட்டத்திலிருந்த ஒரு யாத்திரிகன், 'அந்த ஊர்வலக் கூட்டத்தினிடையே திடீரென்று சுடர் விட்டது ஒரு திவ்யஜோதி! நானே பார்த்தேன்! என்று அதிசயமாய்ச் சொன்னான். அப்போது அங்கு வந்து சேர்ந்த சேரன் சிரித்துக்கொண்டே, 'ஜோதியா? பாண்டியர் போட்ட மத்தாப்பு ஜோதிதான்; நானும் கூட இருந்தேன்' என்றான். 'அந்த ஜோதி கருடனும் விஷ்ணுவுமாகக் காட்சியளித்ததே!' என்று யாத்திரிகன் சொன்னதும், 'கருட பட்சி வட்டம் போட்டிருக்கலாம்; அல்லது திருடனைக் கருடன் என்று மயங்கியிருக்கலாம். பெருங்கூட்டத்தின் உஷ்ணந்தான் விஷ்ணு என்றும் கருடன் என்றும் பொறி கலங்க வைத்திருக்கவேணும்' என்று சிரித்தான் சேரன்.

'கருடனையும் விஷ்ணுவையும் தரிசித்து விஷ்ணுசித்தர் பல்லாண்டு பாடவில்லையா?' என்று யாத்திரிகன் ஆவலாய்க் கேட்டதும், அதற்குள் அங்கு வந்து மொய்த்துவிட்ட சன்னியாசிகளெல்லாம்,

பல்லாண்டு, பல்லாண்டு,
வில்லாண்டு சேரனுக்கு பல்லாண்டு
கல்லாண்ட தோளனுக்குப் பல்லாண்டு,
கலகத்திற்குப் பல்லாண்டு,
குழப்பத்திற்குப் பல்லாண்டு,
புரட்சிக்குப் பல்லாண்டு,
பாண்டியன் வீழ்க,
சேரன் வாழ்க,
பல்லாண்டு பல்லாண்டே

என்று கூச்சலிட்டார்கள்.

(தொடரும்)



சமீபத்தில் கிண்டியில் க்ஷயரோக நிவாரணத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட பி. ஸி. ஜி. மருந்து தயாரிப்பு வேலைகளை இந்திய டொமினியன் சுகாதார மந்திரி ஸ்ரீமதி அமிர்த கௌரி பார்வையிட்டார்.



மாதர் மகா சபை

'குங்குமம்'

'பாட்டியே வந்து விட்டார்' என்றாள் ருக்கு.

'ஏன், என்ன பாட்டிக்கு கிராக்கி?' என்றாள் அங்கே வந்த சேஷிப்பாட்டி.

'எல்லாம் உங்களைப்பற்றித் தான் பேச்சு நடைபெறுகிறது' என்றாள் ருக்குவின் மாமியார்.

'என்னைப்பற்றியா? பரவாயில்லையே, அவ்வளவு முக்கியத்வம் ஏற்பட்டுவிட்டதா இந்த இடத்தில் எனக்கு?' என்றாள் பாட்டி.

'முக்கியத்வமா? ஒருமணியாக இந்த சரோஜா பேசுகிற ஹாஸ்யம் சிரித்துச் சிரித்து எல்லோருக்கும் வயிறு புண்ணாகப் போய்விட்டது' என்றாள் ருக்குவின் மாமியார்.

'என்னடி அது அப்படிப் பட்ட அதிசயம்?' என்றாள் பாட்டி.

'உங்கள் குடித்தனக்கார மாமியின் பெண் சீதா இருக்கிறாளே ரொம்ப பொல்லாதவள் பாட்டி' என்றாள் சரோஜா.

சே! சே! பாவம், ரொம்ப நல்ல பெண். கள்ளங்கபடம் ஒன்றுந்தெரியாது. மனதில் இருப்பதை அப்படியே சொல்லி விடும். அதனால் உனக்கு அப்படித் தோன்றுகிறதோ என்னமோ, ரொம்ப நல்ல பெண் அது' என்றாள் பாட்டி.

'பொல்லாதவள் என்றால் சண்டைக்காரி என்ற அர்த்தத்தில் சொல்லவில்லை. ரொம்ப கெட்டிக்காரி. வேடிக்கை வேடிக்கையாகப் பேசுகிறாள் என்ற அர்த்தத்தில் சொன்னேன். உங்கள் பிள்ளையையும், நாட்டுப் பெண்ணையும்பற்றி அது பண்ணுகிற ஹாஸ்யம் ஒரு புஸ்தகம் எழுதலாம். என்ன தான் சொல்கிறது தெரியுமா?' என்றாள் சரோஜா.

'என்னைப்பற்றி ஒன்றும் சொல்லுகிறதில்லையோ?' என்றாள் பாட்டி.

'உங்கள்மேல் அதற்கு நல்ல அபிப்பிராயம். 'பாவம், பாட்டி வாயில்லாப்பூச்சி, ரொம்ப நல்லவள். அந்தப் பெண் அவளைப் பாடாய்ப் படுத்தி வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளும். அவள் தான் அப்படி என்றால், வயிற்றில் பிறந்த பிள்ளை, அவனும் பெண்டாட்டி வார்த்தையைக் கேட்டுக்கொண்டு அப்படி தலை கால் தெரியாமல் குதிப்பான். பாவம், பாட்டி ஒன்றுக்கும் வாயைத்திறக்க மாட்டாள். ரொம்பப் பொறுமைசாலி' என்று அடிக்கடி சொல்லும் என்றாள் சரோஜா.

'ஏன் என்ன சொல்கிறது அவர்களைப்பற்றி?' என்றாள் பாட்டி.

'உங்கள் நாட்டுப் பெண்ணுக்குச் சமையல் நன்றாக செய்யத் தெரியாதோ?' என்றாள் சரோஜா.

'உஸ் உரக்கச் சொல்லாதே, இதை அவன் (தன் பிள்ளை) கேட்டுக்கொண்டு வந்தானானால் பல்மேல் போடுவான். ஒருநாள் அவள் ஒரு அடை தட்டியிருந்தாள். அதைப்பற்றி நான் சொல்லிவிட்டு, கேட்டுக்கொண்ட வார்த்தைகள் ஏழேழு ஜன்மத்துக்கும் போதும், அவள் செய்கிறது நமக்கு நன்றாகயிராதே தவிர அவன் வரையில் அமிர்தம் என்றாள் பாட்டி.

'அதைப்பற்றித்தான்சொல்ல வாயெடுத்தேன். அதற்குள் நீங்களே வந்துவிட்டீர்கள்' என்றாள் சரோஜா.

'அதெப்படி அவளுக்குத் தெரியுமாம்? என்ன சொன்னாள் அதைப்பற்றி?' என்றாள் சேஷிப்பாட்டி.

'சீதாவின் அப்பா சொல்லிச் சொல்லி சிரிக்கிறாராம். உலகத்திலே பலவித பைத்தியங்கள் உண்டு. கல்லை வீசி எறிகிற பைத்தியத்தையும் தெருவில் ஓடுகிற பைத்தி[illegible]தையும் சொல்லவில்லை. [illegible]வளியில்

நாலு பேருக்கு மனிதர்களாய்க் கௌரவமாய் இருக்கிறவர்கள் சிலர் குடும்பத்தில் பெரும் பைத்தியக்காரத்தனமாய் நடந்துகொள்கிறார்களே அவர்களைப்பற்றித்தான் சொல்கிறேன். அப்படிப்பட்டவர்களில் உங்கள் பிள்ளையும் ஒருவராம். உங்களுக்குக் கார அடை என்றால் ரொம்ப இஷ்டமாம். அன்று அஷ்டமியாம். அஷ்டமி பலகாரத்துக்கு உங்களுக்குக் கார அடை செய்ய வேண்டுமென்று முதல்நாள் சொல்லிக்கொண்டிருந்தீர்களாம். அஷ்டமியன்று உங்கள் நாட்டுப்பெண்ணே சமையல் செய்ய ஆரம்பித்துவிட்டாளாம்' என்று சரோஜா சொல்லிக்கொண்டிருக்கையில், 'ஆமாம். இப்படிப்பட்ட சமயங்களில் அவர்கள் ரொம்ப பரிவு காட்டிக்கொண்டு சமையல் செய்ய வந்துவிடுவார்கள்' என்றாள் பானு.

'மழை பெய்து கெடுத்தது என்று சொல்வதில்லையா? அந்த மாதிரி போலிருக்கிறது!' என்றாள் விமலா.

'உம். நீ மேலே சொல்லு' என்று சரோஜாவைப்பார்த்துச் சொன்னாள் ருக்குவின் மாமியார்.

'நிறைய பருப்புகளெல்லாம் சேர்த்து அடை செய்திருந்தாளாம். பாட்டி அடையின் ஒரு மூலையை 'விண்டு' வாயில் போட்டுக்கொண்டாராம். அதை விள்ளுவதற்கே மூன்று நிமிஷம் ஆயிற்றாம். அதை வாயில் போட்டுக்கொண்டு மெல்லுவதற்குள், பல்லும் கிடையாதா பாவம், இரண்டு தாடையும் அசந்து போய் கத்தரித்துக் கீழே விழுந்து விடும்போலாகிவிட்டதாம். பாட்டி அப்படியே மீதி அடையை உள்ளே கொண்டு வைத்துவிட்டாளாம், ஒன்றும் சொல்லக்கூட இல்லையாம். நாட்டுப்பெண், பிள்ளையிடம் இதை ஒன்றுக்குப் பத்தாகக் கலகம் செய்து கொடுத்துவிட்டு, 'அதற்காகத்தானே இந்த வீட்டில் நான் சமையல் ஜோலிக்கே போவது கிடையாது! ஐயோ பாவம், தள்ளாத கிழவி கஷ்டப்படுகிறாளே என்று மனது கேட்காமல், செய்யப் போனால் இந்த 'நிஷ்டுரம்' அவமானம்தான். எனக்கேன் இந்த வீண் வம்பெல்லாம்? அவரே அவருக்கு இஷ்டமானபடி செய்துகொள்ளட்டும்' என்று இரண்டு, மூன்று பாத்திரத்தை படார், படீரென்று ஓசைப்படுத்திவிட்டு, சமையலறைக் கதவை ஒரு அறை அறைந்து சாத்திக் கொண்டு கூடத்துக்கு வந்துவிட்டாளாம். தெருவிலிருந்த பிள்ளை இந்த சமுத்திர இரைச்சலைக் கேட்டுவிட்டு உள்ளே வந்து, 'என்ன விபரீதம் நேர்ந்து விட்டது? அம்மா மனசு கோணும்படியான காரியம் என்ன நடந்து விட்டது?' என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தாராம். நான் நேற்றே சொன்னேனல்லவா? நாளைக்கு அஷ்டமி வருகிறது. அம்மாவுக்குப் பலகார தினம். நல்லபடியாகப் போகவேண்டுமென்று?' என்றாளாம் நாட்டுப்பெண். 'ஏண்டி உனக்கு இந்தத் தள்ளாத வயதில் இப்படிப்பட்ட 'நோட்ட'மெல்லாம்? ஏதோ போட்டதைச் சாப்பிட்டுவிட்டு 'கிருஷ்ணா ராமா' என்று விழுந்து கிடக்கக்கூடாதோ? அதெல்லாம் முன் காலம். எடுத்ததற்கெல்லாம் நாட்டுப்பெண் மீது தப்பு கண்டுபிடித்து ஒன்றுக்குப்பத்தாகப் பிள்ளையிடம் கோள் சொல்லிக் கொடுத்து குடும்பத்தில் வீண் சண்டையை உண்டுபண்ணி வேடிக்கை பார்ப்பது. அப்பொழுது நாட்டுப்பெண்களும் பாவம், மாமியார் எதைச் சொன்னாலும் நாம் கேட்டுக்கொண்டுதான் போகவேண்டுமென்று பயந்துகொண்டிருந்த காலம். இப்பொழுதுதான் உலகம் தலைகீழாகிவிட்டதே. முதலாளியைக் கண்டால் தொழிலாளிக்கு 'கிள்ளுக்கீரை' மேலதிகாரியைக்கண்டால் குமாஸ்தாக்களுக்கு ஒரு அலட்சிய புத்தி. மந்திரியாயிருந்தால் என்ன? அவர்களும் நம்மைப்போல மனிதர்கள் தானே! அவர்கள் சொல்லி நாம் கேட்பதென்ன? நாம் சொல்கிறபடிதான் அவர்கள் கேட்கட்டுமே என்ற விபரீதப் போக்கு நாமாயிற்று—நம் அகமுடையானாயிற்று, அவர்கள் பணத்தில் குடும்ப காலட்சேபம் நடப்பதாயிருந்து, அவர்கள் தயவு வேண்டியதாக இருந்தால் அவர்கள் அதிகாரத்துக்கு அர்த்தம் உண்டு. நம் கணவர் சம்பாதிக்கிறார், நம் தயவில் மாமியாரோ, மாமனாரோ இருக்க வேண்டியவர்கள். இனி இந்த வீட்டுக்கு நாம் எஜமானி. இங்கே அவர்களுக்கென்ன அதிகாரம்? என்று நாட்டுப்பெண்கள் வாதம் செய்கிற காலம். பெரியவர்கள், சிறியவர்கள் என்ற வித்தியாசமேதான் போய்விட்டது. இப்படிப்பட்ட ஒரு விபரீத மனப்பான்மை ஏற்பட்டிருக்கிற, காலத்தில்பழைய கௌரவங்களைக் கொண்டாடினால் முடியுமா?' என்று பிள்ளையாண்டான் அம்மாவிடம் நியாயத்தை எடுத்துச் சொல்ல ஆரம்பித்து விட்டாராம்.

...அகமுடையாள் கண்ணுக்கு...

‘ஏண்டா அப்பா வரும்போதே இப்படித்தூற்றிக்கொண்டுவருகிறாய்? நான் வாயைத் திறக்கவில்லையே. அதில் உப்பு அதிகமாக இருக்கிறதா? காரம் அதிகமாகவிருக்கிறதா என்றுகூட எனக்குப் பார்க்கும் உத்தேசம் இல்லை. வாயில் பல் சரியாக இருந்தால் இரும்புமாதிரி இருந்தால்கூட எப்படியோ சாப்பிட்டு விடுவேன். தாடை அசந்துபோய்விட்டது. அதனால் கொண்டுவைத்து விட்டேன். இது ஒரு தப்பா? என்னமோ சமையல் என்றால் எல்லோருக்கும், ஒரு வேளை இல்லாவிட்டாலும் ஒருவேளை தவறுவது சகஜந்தான். இதை ஏன் இவ்வளவுபிரமாதப்படுத்துகிறாய்?’ என்றாளாம் பாட்டி.

‘உனக்கு அது சாதாரணமாக இருக்கலாம். எனக்கு அது பிரமாதம்தான். அதில் எவ்வளவு உள் அர்த்தம் இருக்கிறது தெரியுமா? நான் முதலில் சாப்பிட்டுப் பார்த்ததுதான். அந்த அடை உண்மையில் இன்று நன்றாகவே இருந்தது. கடைசியில் கொஞ்சம் எனக்காக மிகுத்திவை என்று சொல்லிவிட்டுப் போயிருந்தேன். நான் சாப்பிட்டுப் பார்க்காவிட்டாலும் பரவாயில்லை, நீ சொல்வதைக் கேட்டுக்கொண்டு போகலாம். இந்தமாதிரியான அற்ப புத்தியையெல்லாம் இனிமேல் விட்டுவிடு என்று பிள்ளையாண்டான் சொல்லிவிட்டு, ‘அவள் கிடக்கிறாள். வயசாகிவிட்டாலே எப்படிப்பட்டவர்களுக்கும் புத்தி கொஞ்சம் தடுமாற்றம்தான் ஏற்படும். அவள் எதையாவது சொல்லிக்கொண்டு இருக்கட்டும். அதையெல்லாம் நீ பொருட்படுத்தாதே. எங்கே, அந்த அடையைக் கொண்டு வா இப்படி’ என்று பெண்டாட்டிக்குத் தேறுதல் வார்த்தைகள் சொல்லிவிட்டு நாலைந்து அடைகள் வாங்கிக்கொண்டு தெருப் பக்கம் போய்விட்டாராம். அங்கே கீதாவின் தகப்பனார் உட்கார்ந்துகொண்டிருந்தாராம். இந்தக் கிழங்களே ரொம்ப ‘நியூஸன்ஸ்’ ஸார்! எதையாவது கால்பிராண்டி வீண் சண்டையைக் கிளப்பிக்கொண்டிருக்கிறதுகள். இந்த அடையைச் சாப்பிட்டுப் பாருங்கள்! என்று கொண்டு வந்திருந்த அடைகளில் ஒரு இரண்டு அடையைக் கீதாவின் தகப்பனாரிடம் கொடுத்தாராம். பாவம்! கீதாவின் தகப்பனார் அந்த அடையை விள்ளப் போனால் கருங்கல்மாதிரி இருந்ததாம். கஷ்டப்பட்டு அதை விண்டு வாயில் போட்டுக் கொண்டால் அவ்வளவுதான் பாட்டி செய்ததைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருந்ததாம். இருந்தாலும் கெட்டிக்காரத்தனமாக ‘நன்றாக இருக்கிறதே. இதுவா பாட்டிக்குப் பிடிக்கவில்லையாம்?’ என்று அவருக்கு இச்சகமாகச் சொல்லிவிட்டு அவருக்குத் தெரியாமலே அடையை விண்டு விண்டு சாப்பிடுகிற மாதிரி தெருவில் போட்டுவிட்டாராம். ‘எப்படியிருக்கிறது நியாயம் பாருங்கள்!’ என்றாராம் பாட்டியின் பிள்ளை. காலையில் எழுந்து, அவர் பார்ப்பதற்குள் அடைத்துண்டுகளை வேறு எங்காவது கண்மறைவாகப் போட்டுவிட வேண்டுமென்று கீதாவின் தகப்பனார் தெருவில் வந்து பார்த்தால் பக்கத்தில் இன்னும் பல அடைத் துண்டுகள் விழுந்திருந்தனவாம்’ என்றாள் சரோஜா.

“..........பெண்டாட்டி பேச்சை 'கேட்டுக்கொண்டு..........”

'பாட்டியின் பிள்ளையே போட்டிருக்கும்' என்ருள் பானு.

'அதுவேதான். பெண்டாட்டிக்குப் பரிந்து பேசிற்றே தவிர, அதற்குமாத்திரம் எப்படி சாப்பிட முடியும். இரும்பினுல் செய்த பல்லா என்ன? கீதாவின் தகப்பனுருக்குத் தெரியாமல் அதுவும் கீழே போட்டுவிட்டது' என்ருள் சரோஜா.

எல்லோரும் கொல் என்று சிரித்துவிட்டார்கள். 'பெண்டாட்டிக்கு அப்படிப் பரிந்து பேசுகிறதுகள்' என்ருள் ருக்குவின் மாமியார்.

'இல்லாவிட்டால் முடியுமா மாமி? இனி அவருடைய சுக துக்கங்களைக் கவனிக்க வேண்டியவள் அவள்தானே! பாட்டியைப்பற்றி இனி என்ன அக்கரை. ஆகையால் பெண்டாட்டி எதைச் சொன்னுலும் தலை ஆட்டித்தான் ஆகவேண்டும். இதுதான் உலகம்' என்ருள் வசந்தா.

'இது எவ்வளவோ தேவலையே. எங்கள் பக்கத்தகத்தில் ஒரு 'சமத்து' இருக்கிறது. அதற்கு வீட்டு வஸ்து ஒன்றும் நன்ருக இராது. அடுத்த வீட்டு அம்புலு நன்ருக இருப்பாள். அம்புலு செய்யும் சமையல் அமிர்தமாக இருக்கும். அம்புலுவைப்பற்றி ஒரு நாளைக்கு நான்கு தரமாவது 'நாம ஸ்மரணை' செய்யாவிட்டால் அதன் தலை வெடித்துவிடும். தன் அகமுடையான் அதன்

"..............இந்தக் கிழங்களே 'நியூஸென்ஸ்' ஸார்.............."

கண்களுக்குக் கோரஸ்வரூபமாய்த் தென்படுவாள். அவள் செய்யும் சமையல் எல்லாம் விஷமாக இருக்கும் அதன் வாய்க்கு. வீட்டில் எதை விஷமாய் இருக்கிறதென்று சொல்கிறதோ, அதையே அம்புலு செய்தது என்று சொல்லி இலையில் கொண்டுபோட்டால் நீயும் செய்கிருயே, இதைச்சாப்பிட்டுப்பார் எப்படி இருக்கிற தென்று' என்று நொட்டை விட்டுக்கொண்டு, சாப்பிடும். இப்படி சில பிரகிருதிகள்' என்ருள் சாந்தா.

'என்ன பிரகிருதிகளோ! சரோஜா சொன்னது ஒரு எழுத்துகூடப் பிசகில்லை. வயசானவர்கள் இனி இந்த உலகத்தில் இருக்கயோக்கியதை இல்லை! நான் வருகிறேனடியம்மா! அவள் தங்கை வந்திருக்கிருள். சினிமாவுக்குப் போகவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தாள். குழந்தையை வைத்துக்கொள்ளவேண்டியிருக்கும். நான் வருகிறேன்,' என்று சொல்லிவிட்டு எழுந்தாள் சேஷிப்பாட்டி.

தித்திப்பு திருவேங்கடம்

நியாயவாதி

என் உறவினரான ஒரு தனிகர் வீட்டுத் தடபுடல் கல்யாணத்துக்குச் சென்றுவிட்டு நான் என் நண்பர்கள் சிலருடன் ரயிலில் எங்கள் ஊருக்குத்திரும்பி பிரயாணம் செய்துகொண்டிருந்தோம். அப்பொழுது எங்கள் பேச்சில் சமையல்காரர்களைப்பற்றிய பிரஸ்தாபம் நிகழ்ந்தது.

"இந்தக் காலத்தில் ரொக்கம் நிறைய வைத்திருப்பவர்கள் சமையற்காரர்கள் தான்" என்றார் ஒருவர்.

"ஆமாம்! அடுத்தாத்து அண்ணாச்சாமி ஐயாயிரம் ரூபாய் சேர்த்துவிட்டான். நல்ல வீடு ஒன்று வேண்டும் என்று தவிக்கிறான்" என்றார் இரண்டாமவர்.

இன்னொருவர்:"அதுவும் இந்தக் கல்யாண "ஸீஸனில்" நல்ல சமையல்காரர்பாடு யோகந்தான். ரயில்சார்ஜ், படி, தினம் பத்து அல்லது பதினைந்து என்று சம்பளம், கல்யாணமானபின் அதிகப்படி ஸம்பாவனை—இவையெல்லாம் வேறு எந்தத் தொழிலாளிக்குக் கிடைக்கும்?" என்று கேட்டார்.

முதலில் பேசியவர் என் பக்கம் திரும்பி ஒரு கனைப்பு கனைத்தார். அரைத் தூக்கத்திலிருந்த நான் நன்றாய் விழித்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தேன். என் நண்பர் ஏதோ பழைய கதையை ஆரம்பிக்கப் போகிறார் என்பது எனக்கு அனுபவ ரீதியாகத் தெரியும்.

"உங்களுக்குத் தித்திப்பு சமையல் திருவேங்கடத்தைப்பற்றித் தெரியுமா?" என்று அவர் ஒரு கேள்வியை போட்டார். எப்பொழுதும் அவர் ஒரு கேள்வியுடன்தான் தான் கூறப்போகும் விஷயத்தை ஆரம்பிப்பார்.

நான், "கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று தலையை ஆட்டினேன்.

"இருபது வருடத்துக்கு முன் அவன் பெயர் இந்தத் தென்னாடு பூராவுமே பரவியிருந்தது. அவன் இறந்துபோய் பதினைந்து வருடங்களுக்குமேல் ஆகின்றன. எனினும் அவன் கீர்த்தி மங்கவிடவில்லை அவனைப்பற்றி விவரமாய் கூறுகிறேன் கேளுங்கள்" என்று பீடிகை கூறிவிட்டு அவர் மேலே சொல்லலானார். அவர் கூறியது பின்வருமாறு:—

★ ★ ★ ★

"திருவேங்கடம் பிறந்த ஊர் சோழநாட்டிலுள்ள திருக்கண்ணங்குடி என்ற திவ்யதேசம். அது நூற்றெட்டு திருப்பதிகளில் ஒன்று. திருமங்கையாழ்வாரால் மங்கள சாஸனம் அதற்கு சிறப்பை யளிக்கிறது. அதுமட்டுமல்ல. "உறங்காப்புள்ளி, உறைக்கிணறு, காயாமகிழ், தீரா வழக்கு திருக்கண்ணங்குடி" என்று தொன்று தொட்டு வழங்கும் பழமொழியே அதன் பிரபாவத்தை ஒருவாறு விளக்குவதாகும்.

இந்தப் புராதனமான க்ஷேத்திரத்தில் திருவேங்கடம் சுமார் எழுபது வருடங்களுக்குமுன் பிறந்தான். அவன் முன்னோர்கள் பரம்பரையாய் சமையல் தொழிலிலேயே ஜீவனோபாயமாகக் கொண்ட வைஷ்ணவப் பிராம்மணர்கள். அவன் தகப்பனார் கோவிலில் பரிசாசகராய் அமர்ந்து அங்கே எழுந்தருளிய எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்து வந்தார்.

தன் காலத்துக்குப்பின் தன் புத்திரன் திருவேங்கடத்தைதான் செய்துவந்த கைங்கர்யத்திலேயே அமர்த்திவிட வேண்டும் என்று தந்தை உத்தேசித்திருந்தார். ஆனால் திருவேங்கடத்துக்கு அந்த சிறு ஊர் பிடிக்கவில்லை. பால்யத்திலேயே எழுதப் படிக்கக் கற்றுகொண்ட அவன், படிப்பை நிறுத்திவிட்டு, தஞ்சாவூருக்குச் சென்று ரங்கமன்னார் என்ற வக்கீலிடம் சமையற்காரனாக அமர்ந்தான்.

ரங்கமன்னார் ஒரு பணக்கார வைஷ்ணவ பிராம்மண பரம்பரையைச் சேர்ந்தவர். தொழிலிலும் நல்ல சம்பாத்தியமுள்ளவர், உல்லாஸ புருஷர். வசீகரமான தோற்றமுடையவர். ஒரு ஸமஸ்தானத்து அதிபதியைப்போல் வாழ்க்கை நடத்துபவர். அவர் பேச்சு மிகவும் அற்புதமாய் இருக்கும். எப்பொழுதும் பத்து பதினைந்துபேர் அவரைச் சுற்றிக்கொண்டே இருப்பார்கள். அவர் வீடு ஒரு அன்னசத்திரந்தான். அவர் கடைத்தெருவுக்குச் சென்றால் ஆயிரம், இரண்டாயிரம் என்று கணக்கில்தான் அவர் பணம் செலவழியும்.

"சாப்பாடு என்றால் ரங்கமன்னார் வீட்டுச் சாப்பாடுதான் சாப்பாடு" என்று அக்காலத்தில் ஜனங்கள் கூறுவார்களாம். அவ்வளவு முதல்தரமான சாப்பாடு. இரண்டு வேளைகளில் அவர் வீட்டில் நடைபெறுமாம். அவர் தனியே சாப்பிடமாட்டார் குறைந்தது இருபது பேர் நண்பர்களோ, உறவினரோ அவருடன் உட்கார்ந்து சாப்பிட வேண்டும். காலை பத்துமணிக்கு இவருடன் உட்கார்ந்தால் பதினொருமணிக்குத்தான் எழுந்திருப்பார்.

"நெய்யிடை (நெய் எடை) நல்லதோர் சோறும்" என்று ஆழ்வாரால் கொண்டாடப்படும் அன்னத்துடன் வித விதமான கறி வகைகள், பச்சடிகள், குழம்பு வகைகள், பாயஸம் சிற்றுண்டிகள், பட்சணங்கள், ஊறுகாய்கள், இவை பரிமாறப்படும். இவை எல்லாவற்றிக்கும் பொறுப்பாளி திருவேங்கடந்தான்.

சிற்றுண்டி நேரத்தில் கச்சேரிக்கு திருவேங்கடம் தன் யஜமானரைத் தேடிக்கொண்டு வருவான். அவன் கையால் பலகாரம் பரிமாறப்படுவதில் ரங்கமன்னாருக்கு அலாதியான ஒரு திருப்தி. அவருக்கு மட்டுமல்ல. அங்குள்ள மற்ற வக்கீல்களுக்கும் அவன்

கையால்தான் உபசரிப்பு நடைபெறும்.

சுவைக்கு மிகுந்த இனிப்பைக் கொடுக்கும் பக்ஷணங்களையும் சித்திரான்னங்களையும், பாயசங்களையும் தயாரிப்பதில் திருவேங்கடம் கைதேர்ந்தவனானான். அவன் யஜமானர் ரங்கமன்னாருக்கு நெருங்கிய நண்பரான ஒரு மகாராஷ்டிரப் பிரபு வீட்டிலுள்ள நிபுணனான சுயம்பாகியிடமிருந்துதான் அவன் பல அற்புதமான முறைகளை கற்றுக் கொண்டது. அவற்றை கையாண்டு தனது சாமர்த்தியத்தினால் அவன் ரங்கமன்னாருடைய அன்பையும், அபிமானத்தையும் கவர்ந்து விட்ட பின் ரங்கமன்னாரே அவனுக்கு ஒரு தகுந்த கன்னிகையைத் தேர்ந்தெடுத்து விவாகம் செய்து வைத்தார். தஞ்சாவூர் தெற்கு வீதியில் அவனுக்கு ஒரு வீட்டையும் வாங்கிக் கொடுத்தார். இறக்கும்பொழுது அவனுக்கு இரண்டாயிரம் ரூபாய் ரொக்கமும் கொடுத்தார்.

ரங்கமன்னார் காலத்துக்குப்பின் திருவேங்கடம்வேறொருவருடனும் நிரந்தரமாய் வேலை செய்ய இஷ்டப்படவில்லை. எனினும் தித்திப்பு பண்டங்கள் தயாரிப்பதில் நிபுணன் என்று கீர்த்தி பெற்ற அவனை சும்மா இருக்க விடுவார்களா ஆயிரக் கணக்கில் பணத்தைக் கொட்டி கல்யாணம் செய்யும் கனவான்கள் ?

அந்த நாளில் எந்த வைஷ்ணவ பிரமுகர் வீட்டுக் கல்யாணமும், திருவேங்கடமின்றி சிறக்காது. அவன் வருகையின்பொருட்டு சில முகூர்த்தங்கள் ஒத்திப் போடப்பட்டன என்பதையும், அவன் வராததால் சில முகூர்த்தங்கள் நடைபெறவில்லை என்பதையும் நான் அறிவேன்.

இந்த நாள் கல்யாணங்கள் மின்னல் வேகத்தில் நடைபெறுகின்றன. ரயில் தாமதத்தாலோ அல்லது தவறினதாலோ கொஞ்சம் நேரங்கழித்து கல்யாணத்துக்கு விஜயம் செய்யும் விருந்தினர்பாடு சங்கடந்தான். கல்யாணம், விருந்து எல்லாம் முடிந்து போய் அவரவர் தங்கள் ஊருக்குத் திரும்பி போய்கொண்டிருப்பார்கள். ஆனால் அந்நாளில் நடைபெறும் விவாகங்கள் அப்படியல்ல. ஏழைவீட்டுக் கல்யாணம் கூட 5 நாட்கள் நடைபெறாமல் இருக்காது. அப்படியிருக்க பணம் படைத்தவர்கள் வீட்டு விவகாரங்களைப்பற்றிக் கேட்கவும்வேண்டுமா? கல்யாணத்துக்கு முன் இரண்டு பின் இரண்டு வாரமும் ஒரே கோலாஹலமாய்த்தான் இருக்கும். சாப்பாட்டு கூட்டத்தைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை.

முகூர்த்தத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்னமே திருவேங்கடத்துக்கு 25 ரூபா அச்சார (அட்வான்ஸூம்) ரயில் சார்ஜூம் கொடுத்து அவனை கல்யாணத்துக்கு வர ஒத்துக்கொள்ளும்படி செய்து விடுவார் கல்யாணத்தை நடத்தும் பெரிய மனிதர். அவனுக்கு தினச் சம்பளம் பத்து ரூபாய். ஆமாம் அந்தக் காலத்து பத்து ரூபாயும் சரி இந்த காலத்து ஐம்பது ரூபாயும் சரி. சாதாரண சமையல்காரனுக்கு அக்காலத்தில் ஏற்பட்ட தினசரி 'ரேட்' மூன்று அல்லது நாலு ரூபாய்தான். ஆனால் அந்த விகிதத்தைப்போல் மூன்று பங்கு திருவேங்கடத்துக்குக் கொடுக்கவேண்டும். அவன் தனது ஊரைவிட்டுப் புறப்படும் நாள் முதல் அவன் மீண்டும் தன் ஊருக்கோ அல்லது வேறொரு கல்யாணத்துக்கோ போகும் நாள் வரையில் அந்த விகிதப்படிதான் அவனுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டும்.

முகூர்த்தத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் முன்னதாக அவன் கல்யாண வீட்டு சமையல் அறைக்கு வந்துவிடுவான். மணமகன்வீட்டுக்கு சீர்களுடன்பக்ஷணவகைகள். எடுத்துக்கொண்டுபோக வேண்டியதற்கு தயாராய் இருக்க வேண்டுமன்றோ? அதனால் இரண்டு நாட்கள் முன்னிருந்தே அவனுக்கு வேலை ஆரம்பமாகும்.

பக்ஷணங்கள், சித்திரான்னங்கள், பாயஸ வகைகள்—இவைதான் திருவேங்கடம் பொறுப்பிலுள்ள அயிட்டங்கள். "நெய், சர்க்கரை, ஏலக்காய் ரவை—இவற்றைத்தான் அவன் முக்கியமாய் கையாளுவான். மற்றவையெல்லாம் சில்லரை சமையல்காரர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள்."

ஆகா! அவன் கையால்தான் என்ன அற்புதமான மாயாசக்தி இருந்ததோ தெரியவில்லை. அவன் செய்யும் பக்ஷணங்கள், பாயஸங்கள், சித்திரான்னவகைகள் எல்லாம் முதல்தரத்திலும் முதல்தரமாகவே இருக்கும். புராணங்களிலும், இதிகாசங்களிலும் நாம்நளபாகத்தையும் பீமஸேன பாகத்தையும் பற்றி படித்திருக்கிறோம். அவற்றைப்போன்ற தனிச் சிறப்பை திருவேங்கடத்தின் பண்டங்களைப் புசிப்பவர்கள் ரஸித்துணர்வார்கள்.



கல்யாணத்தில் சீருக்காக வைக்கப்படும் பக்ஷணங்களைத் தவிர, தினமும் இரண்டு வேளைகளிலும் தயாரிக்கப்படும் பக்ஷணங்களும், பாயஸ வகைகளும் திருவேங்கடத்தின் கைச்சிறப்புடன் பரிபக்குவமாகும். ஹல்வாக்கள், ஜிலேபி, லட்டு, மைசூர் பாகு. பர்பி— திருவேங்கடத்தால் தயாரிக்கப்படும். இவற்றுக்கு தேவாமிருதமும் ஈடாகமாட்டாது என்று போஜன ரஸிகர்கள் பலர் நாக்கை கொட்டை விட்டுக்கொண்டுசொன்னதை நான் கேட்டிருக்கிறேன். ஒரு பெரிய கல்யாணம் நடக்கப்போகிறது என்றால் அதைப்பற்றி போஜன ரஸிகர்களும், சாப்பாட்டு ராமன்களும் கேட்கும் முதல் கேள்வி. "கல்யாணத்துக்கு திருவேங்கடம் வரப்போகிறானா? அவனுக்கு"அச்சாரம் கொடுத்தாய் விட்டதா?'' என்பதுதான். அவன் வரவில்லை என்றால் அவர்களுக்கு அதிருப்தியும், அசிரத்தையும் உண்டாகிவிடும்.

எனக்குத் தெரிந்த ஒரு கல்யாணத்தில் முதல் இரண்டு நாட்களில் திருவேங்கடம் வர இயலவில்லை. அவன் வேறொரு கல்யாணத்தில் வேலை செய்துகொண்டிருந்தான். அதனால் முதல் சொன்ன பெண் வீட்டார் வேறு சமயல்காரர்களை அமர்த்த வேண்டியதாயிற்று. அவர்கள் பணத்தை வாரியிறைத்து தடபுடலாய் கல்யாண ஏற்பாடுகளைச் செய்தனர். எனினும் சம்பந்தி வீட்டார் அவர்கள் மீது ஏதேனும் குறை கூறிக்கொண்டே இருந்தனர். நல்லவேளையாய் மூன்றாவது நாள் திருவேங்கடம் அங்கே வேலை செய்ய ஒப்புக்கொண்டு வந்தான் அவன் வந்த பின்னர்தான் சம்பந்திகள் குறை கூறுவதும் ஏச்சும் நின்றன.

திருவேங்கடம் பார்வைக்கு லக்ஷணமாய் இருப்பான். சுத்தமாயும் ஆசாரமாயும் இருப்பான். அவனது துணிமணிகள் வெள்ளை வெளேரென்று இருக்கும். அடுப்பங்கரையில் வேலை செய்யும் போது அவன் கையில் விசிறி இருக்கும். அவன் உடம்பில் துளி கூட வேர்வை இராது. வெற்றிலை, புகையிலை முதலியவற்றை அவன் உபயோகிக்கமாட்டான் அவன் சுத்தமும் அவன் தொழில் திறமைக்கு ஏற்றதாகவே இருந்தது என்னலாம். எப்பொழுதும் சிரித்த முகமாகவே இருக்கும் அவனது வதனம். எல்லாரிடமும் மரியாதையாகவே இருப்பான். ஆனால் அவன் தனக்கு உரிய கௌரவத்தை விட்டுக் கொடுக்கமாட்டான் ஒருவர் பெரிய மனிதர் என்பதற்காக அவர் அவன் பல்லைக் காட்டிக்கொண்டு கூழைக் கும்பிடு போடமாட்டான். அவனது தன்மையை உணர்ந்தவர் யாவரும் அவனது யோக்கியதையைப் பாராட்டாமல் இரார்.

ஒரு பெரிய பணக்காரர் வீட்டுக் கல்யாணத்தில் பக்ஷண வேலை செய்ய திருவேங்கடம் ஒப்புக்கொண்டிருந்தான். அந்த வீட்டு எஜமானர் தங்கமான மனிதர் ஆனால் எஜமானியம்மாளோ ரொம்பவும் கர்வம் பிடித்தவள். யாரையும் மதிக்கமாட்டாள். தன் வீட்டில் வேலை செய்பவர்களை ஆடுமாடுகளைப்போல் நடத்துவாள்.

இவள் திருவேங்கடத்தை ஓரிரண்டு தடவைகளில் ஏதோ வாய் துடுக்காய்ச் சொல்லிவிட்டாள். அவருக்கு சரியான படிப்பினை கற்பிப்பது என்று அவன் தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த ஸந்தர்ப்பமும் வந்தது. கல்யாண முகூர்த்தம் ஆனபின் பந்தி போஜனம் நடைபெற்றது. சம்பந்திகள், உறவினர் நண்பர்கள் மற்றுமுள்ள கனவான்கள் எல்லாரும் வரிசை வரிசையாய் சாப்பிட உட்கார்ந்திருந்தனர்.

அன்னம், கறிவகைகள் முதலியவற்றை சாதாரணமாய் சமையல்காரர்களே பரிமாறுவார்கள். நெய்யை மட்டும் எஜமானியம்மாள் தான் பரிமாறுவது வழக்கம். அந்த வழக்கத்தை அனுசரித்து அன்று பரிமாறப் பெற்றது. அன்னவகைகள் பரிமாறப்பட்ட பின் பக்ஷணம் எடுக்கும் ஸமயம் வந்தது. ஒரு பெரிய வெள்ளித் தட்டில் ஜிலு ஜிலு வென்று ஜொலித்த ஜிலேபிகளுடன் திருவேங்கடம் பந்தியுள் பிரவேசித்தான் அப்பொழுது எதிரே தோன்றிய எஜமானியம்மாள் "தட்டை தாழ்த்தி வைத்துக்கொள், நான் பரிமாறுகிறேன்'' என்றாள்.

திருவேங்கடம் சிரிப்பு தவழும் முகத்துடன் இது என்ன அம்மா! பந்தி பரிமாற்றமா'' அல்லது பரத நாட்டியமா? ஒன்று நீங்கள் பரிமாறுங்கள் தட்டை உங்களிடம் கொடுக்கிறேன். இல்லாவிட்டால் உங்களுக்குச் சிரமம் வேண்டாம். நானே பரிமாறுகிறேன்' என்றான். எஜமானியம்மாளுக்கு வெட்கம் தாங்கமுடியவில்லை. மறு வார்த்தை பேசாமல் அப்பால் சென்று விட்டாள். அது முதல் அவளுக்கு அவனிடம் பயந்தான்.

சாதாரணமாய் ஒரு பெரிய கல்யாணத்தில் திருவேங்கடத்துக்கு நூறு ரூபாய்க்குக் குறையாமல் சன்மானம் கிடைக்கும். கல்யாண 'ஸீஸனில்' அவன் குறைந்தது மூவாயிரம், நாலாயிரம் சம்பாதிப்பான். ஆனால் அவன் அதிக செலவாளி ரொம்பவும் உதாரமான குணமுள்ளவன் யார் பணம் கேட்டாலும் இல்லை'' என்று சொல்லமாட்டான் அதனால்தான் அவன் அதிகச் சொத்து சேர்க்கவில்லை. "உன் பிள்ளைகளுக்கு நிறைய பணம் வைக்கப்போவதில்லையா?'' என்று கேட்டால் அவன் சிரித்துக்கொண்டே "அப்படி பணம் வைத்துவிட்டுப்போனால் ஊரார் என்ன சொல்லுவார்கள் தெரியுமா? 'என்ன பணம் இருந்தென்ன இவன் சமையல்காரன் பிள்ளைதானே! என்று ஏசுவார்கள் அதனால் நான் அவர்களுக்குச் சொத்து அதிகம் வைக்கப் போவதில்லை'' என்றான்.

எப்படி இருக்கிறது? திருவேங்கடத்தின் கதை?'' என்று என் நண்பர் கேள்வியுடன் முடித்தார்.

அப்பொழுது நாங்கள் இறங்க வேண்டிய ஸ்டேஷனும் வந்தது.

மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப் பூங்கோயிலில்

16

அடியார் பக்தி : வளமும் வலிமையும்

★

பி. ஸ்ரீ.

அடியார் வணக்கத்தை ஆண்டவன் வணக்கத்தைக் காட்டிலும் முக்கியமாகக் கருதியவர் விறல் மிண்ட நாயனார். மலைநாட்டுச் செங்குன்றூர் வேளாளர். மலை நாடு என்றால், இப்போது மலையாளம் என்று சொல்லப்படும் பிரதேசம்தான்.

திரைசெய் கடலின்
பெருவளனும்,
திருந்து நிலனின்
செழுவளனும்

வரையின் வளனும் உடன் பெருகி மல்கு நாடு மலைநாடு என்பது, விறல் மிண்டர் [திரை-அலை. வரை-மலை.] பிறந்த மலையாளத்தின் சேக்கிழார் வர்ணனை. மலையாளத்தைச் சாதாரணமாகப் பரசுராம க்ஷேத்திரம் என்கிறோமல்லவா? இக்கருத்தையே சேக்கிழாரும் 'பரசுராமன் பெறு நாடு' என்பர். பரசுராமன் தென்திசைக் கடலில் தன் மழுவை வீச, மழு விழுந்த இடம் வரையிலும் கடல் விலகிக் கொண்டதால் அப்பிரதேசம் மலைநாடு ஆகிவிட்டது என்பது புராணக் கதை. சரித்திரத்திற்கும் எட்டாத பண்டைப் பழங்காலத்திலே மலைநாடு கடலின் பகுதியாக இருந்து பிறகு நிலப்பகுதியாகி விட்டதுபோன்ற ஒரு நிகழ்ச்சியைப் புதை பொருளாக விளக்குவது புராணக்கதை என்று கருதலாம். அல்லதுமேற்கு மலைத் தொடரால் மறைக்கப்பட்டிருந்த இந்நிலப் பகுதியை ஆரியர் முதன் முதல் கண்டு கொண்ட நிகழ்ச்சியைப் புராணக் கதை குறிப்பதாகவும் கருதலாம்.

இம்மலை நாட்டின் மூதூர்களில் ஒன்றான செங்குன்றூரைப் பின் வருமாறு வருணிக்கிறார்:

வாரி சொரியும் கதிர்முத்தும்,
வயல்மென் கரும்பில் [படுமுத்தும்,
வேரல் விளையுங் குளிர்முத்தும்
வேழ மருப்பின் ஒளிர்முத் [தும்
மூரல் முறுவல் வெண்முத்த
நகையார் தெரிந்து முறை [போக்கும்
சேரர் திருநாட் டூர்களின்முன்
சிறந்த மூதூர் செங்குன்றூர்.

[வாரி-கடல். வேரல் - மூங்கிலில். வேழ மருப்பின்-யானைக் கொம்பில். மூரல் முறுவல் வெண் முத்த நகையார்-பல் லென்று சொல்லுகிற வெண் முத்துக்களை நகைப் பினிடத்தே உடைய பெண்கள். தெரிந்து-ஆராய்ந்து முறைபோக்கும்-முறையாகக் கோத்து வைக்கும்.]

சேக்கிழார் மலையாளம் பார்த்திருக்கிறார்: அந்த வளங்களாலும் அழகுகளாலும் வசீகரிக்கப்பட்டுமிருக்கிறார். மலைநாட்டின் அருவிகளை இளஞ்சூரியனின் பொன்னொளியிலும் பார்த்திருக்கிறார் என்பதற்கு

பொன்தாழ் அருவி
மலைநாடு

என்ற அழகான சொற்றொடரே சாட்சி. இது,

அருவித் திரள் திகழ்கின்ற
ஆயிரம் பொன்மலை ஒத்து

என்ற திருமங்கை மன்னனின் வாக்கை நினைப்பூட்டுகிறது.

இனி, கடலின் வளமான உப்பு, சங்கு, முத்து, பவளம் முதலியனவும், மருத நிலத்தின் வளமான தென்னை, கமுகு, வாழை முதலியனவும், மலையின் வளமான அகில், சந்தனம், தந்தம் முதலியனவும் உள்ள அம்மலையாள நாட்டிலே விறல்மிண்டரின் பக்தி வளத்தைச் சேக்கிழார்,

முதிரும் அன்பிற் பெருந் [தொண்டர்
முறைமை நீடு திருக் [கூடத்(து)
எதிர்முன் பரவும் அருள் [பெற்றே,
இறைவர் பாதம் தொழப் [பெற்றார்

[முறைமைநீடு— (1) ஒழுங்காய்ப் பரவியுள்ள: (2) ஒழுக்கம் மிகுந்த.]

என்று பாராட்டுகிறார்.

சிவஸ்தலங்களுக்குப் போன பொழுதெல்லாம் அடியவர் திருக்கூட்டத்தை முன்னே தொழுது, பின்பே சிவபெருமானைத் தொழும் நியதியை மேற்கொண்டிருந்ததுதான் இவர் பக்தி வளத்தின் சிறப்பியல்பு. இந்நியமத்

துடன் இவர் தாம் வசிக்கின்ற மலைநாட்டை நீங்கி, பல தலங்களிலும் சஞ்சரித்துத் திருவாரூரை அடைந்து சுவாமி தரிசனம் செய்துகொண்டிருந்தார்.

அங்கே ஒருநாள் இவர் பிரசித்திபெற்ற சுந்தரமூர்த்தி நாயனரையும் தரிசித்தார். ஆனால், விறல்மிண்ட நாயனருக்குச் சுந்தரமூர்த்தி நாயனரிடம் அன்பு பெருகுவதற்கு மாருக ஆத்திரமே பெருகிவிட்டது. 'இப்பெரியார் தேவாசிரிய மண்டபம் பொலிய வீற்றிருக்கும் சிவனடியார்களை அடைந்து வணங்காமல், ஒருவாறு ஒதுங்கிப் போகிருரே: இத்தொண்டர் அடியார்களுக்குப் புறம்பு!' என்ருர். ஆனால், சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனரை வலிய ஆட்கொண்டிருக்கிருரே! தம் உள்ளத்தில் எழுந்த ஆத்திரத்திலே விறல்மிண்டர், 'இத்தொண்டரை வலிய ஆட்கொண்ட சிவபெருமானும் புறம்புதான்!' என்று சொல்லிவிட்டார். இத்தகைய அடியார் பக்தியில், மலைநாட்டின் வளத்தையும், வலிமையையும் ஒருங்கே கண்டார் சுந்தரமூர்த்தி நாயனர்.

பிறகுதான் சுந்தரர் அடியார்கள்மீது திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகம் பாடினராம். அது கேட்ட விறல்மிண்டர் மிக மகிழ்ந்து, 'இத்தொண்டருடைய உள்ளம் அடியாரிடத்திலே பதிந்திருக்கிறது?' என்று ஒப்புக்கொண்டார்.

இத்தகைய அடியார் பெருமையைக் குறித்துச் சேக்கிழார் பின்வருமாறு பாடுகிருர்:

ஞாலம் உய்ய, நாம் உய்ய,
நம்பி சைவ நன்னெறியின்
சீலம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பாடச் செழு
[மறைகள்
ஓலம் இடவும் உணர்வறியார்
அடியார் உடனும் உள
[தென்ருல்'
ஆலம் அமுது செய்தபிரான்
அடியார் பெருமை அறிந்தார்
[ஆர்?

[ஞாலம்—உலகம். செழுமறைகள் - செழுமையான வேதங்கள். உணர்வறியார்—உணர முடியாத சிவபெருமான். அடியார் உடனும் உளதென்ருல்—அடியவர் கூட்டத்துடன் இருப்பதாகும் தன்மை இவருக்கு உண்டு என்ருல். ஆலம்—விஷம்.

* * * *

பக்தி மதமாகிய சைவத்திலும் வைணவத்திலும் ஆண்டவன் பக்தியைக் காட்டிலும் அடியார் பக்தி வற்புறுத்தப்படுகிறது. ஆண்டவனை அன்பு மயமாகக் கொள்ளும்போது இந்த நியதி ஏற்படுவது இயல்புதான். சைவத்தில் அன்பு இறைவனது அருளுருவமாய்க் கருதப்படுகிறது.

அன்பும் சிவமும்
இரண்டென்பர் அறிவிலார்;
அன்பே சிவமாவ(து)
ஆரும் அறிகிலார்;
அன்பே சிவமாவ(து)
ஆரும் அறிந்தபின்,
அன்பே சிவமாய்
அமர்ந் திருப்பாரே

என்ற திருமூலர் வாக்கு எவ்வளவு தெளிவாகச் சைவ சமயத்தின் அடிப்படை உண்மையை விளக்குகிறது! இந்த அடிப்படை உண்மையை நன்குணர்ந்து கொண்டால், விறல்மிண்ட நாயனர் போன்றவர்கள் அடியார் பக்தியையும், பணியையும் வற்புறுத்துவதன் இரகசியத்தையும் இனிதுணர்ந்துகொள்ளலாம். இந்த இரகசியத்தை உணர்ந்து கொண்டால் சாதி முதலிய வேற்றுமைகள் ஒடுங்கி ஒழிந்து போகும், அன்புநெறி தழைக்கும்.

—

இராமானுச நூற்றந்தாதி

காயகசிகாமணி-அரியக்குடி
ராமானுஜய்யங்கார்
ஸ்வரப்படுத்தியது

★

'உறுபெருஞ் செல்வமும், தந்தையும்
தாயும், உயர்குருவும்,
வெறிதரு பூமகள் நாதனும்,
மாறன் விளங்கியசீர்
நெறிதருஞ் செந்தமிழ் ஆரணமே!'
என்(று) இந் நீணிலத்தோர்
அறிதர, நின்ற இராமா-
னுசன் எனக்(கு) ஆரமுதே.

ஆரப்பொழில்தென் குருகை
பிரான் அமுதத்திருவாய்
ஈரத்தமிழின் இசை உணர்ந்
தோர் கட்கினியவர்தம்
சீரைப்பயின்றுய்யும் சீலங்கொள்
நாதமுனியை நெஞ்சால்
வாரிப்பருகும் இராமானு சன்
என்றன் மாநிதியே.

[வெறி தரு பூ-வாசனை வீசுகின்ற பூ. பூமகள்-மகாலட்சுமி. நாதன்—கணவனான பகவான். மாறன்-நம்மாழ்வார். சீர்நெறி-சீரான வழி. செந்தமிழ் ஆரணம்-தமிழ்வேதமான திருவாய்மொழி. நீள் நிலம்-நீண்ட பூமி. அறிதர-அறியும்படி.]

கருத்து

பெருஞ் செல்வமும் தந்தை தாயும் குருவும் தெய்வமும் எல்லாம் தமிழ் வேதமான திருவாய்மொழியே என்று உலகறியக் காட்டிய ராமாநுஜர் எனக்கு ஆரமுதமாவார்.

ராகம் : கல்யாணி　　　　　　　　　　　　தாளம் : கண்டஜாதி திரிபுட

(பாட்டு 19—ம் 20—ம்)

(65-வது கர்த்தா)

; , பப பபா பாபம பா தப மக கா கரி | : கா ஸ்ஸ் நித பபாம | கரி கதபமகரீஸ் ஸா ||
உறு பெருஞ் செல்வ . மும் தந் . . . தையும் | . தா யும் . . . உ . . . | யர் . கு . . . ரு . . வும் ||

; ஙிரி கம பம கரீ ஸா, ஸா ஸ ஸா, ஙிரிகரி ஸ ஸ்ஙிரிஸ | ஙிதா, நீரீ கத | பபாக மா பமநித தபபா ||
வெறி த . . . ரும் . . பூ மகள் நா . . த னும் . . . | . . மாறன் வி . | ளங் . . கி ய . . . சீர் . . . ||

; , ஸ்ஸ் ஸ்ஸ்நி தா ஸ்நிரிஸ் ஸ்ஸ்நித பாபப பமதப | மகா, பம பத தப | ஸ்நி தா ஸ்நிக்ரி ரிஸ் ஸ்ா ||
நெறி தரும் . செந்த . . . மிழ் . . . ஆரண மே . . . | . . யென் . றின் . . | நீ . ணி ல . . . த்தோர் . . ||

; , நிஸ் ரிக்ா ஸ்ாரிக் ரிக் ரிஸ்ஸ்ா ஸ்நி ரிஸ் ஸ்ஸ்நித பபாம பத | தப ஸ்நி தரி ஸ்ா | ஸ்ா ஸ்நி தா பா மத பம ||
அறி தர நின் . . . . ற . . இ . . . ரா . . . மா . . னு . | சன் . எ . னக்கு | ஆ ர . . மு தே . . . ||

கரீ — கா மபா பா , கம தாநித பா பமகா கக | கரி காநித தபபா பமகா | கரி கதபம கரீஸ ஸா ||
. . — ஆ ர ப் பொழில் . தென் . . . , கு ரு . . கை . | . . பி . . ரான் . . அ . மு | த . த்தி . ரு . . வாய் ||

; ஙிரி கம பம கா ரிக ரிஸ ஸா ஸா , ஸ ஸா , ஸக ரிஸ ஸா | ஸஙி தா நீரீ கத பபாக மா பா பா ||
ஈ . ர . . . . த்த . மி . . மின் இசை உ . ணர்ந் . . | . . . தோர் கட்கி . னி . . ய வர் தம் ||

; , ஸ்ா ஸ் ஸ்ா நீரிஸ் ஸ் ஸ்நித பா பா நித தப பா பம தப | மகா, மபாம நித தப | பஸ்ாநி தஙி ஸ்நிக்ரி ரிஸ்ஸ்ா ||
சி றைப்ப யின் . . றுய் . . . யும் சி . . லங் . . கொள் . . . | . . நா . . த . மு . | னி . . யை . நெஞ் . . சால் . . ||

; , நிஸ்ரிக் ஸ்ாரிக் ரிக் ரிஸ் ஸ்ா ஸ்நி ரிஸ் ஸ்ஸ் நித பபாம பத | தப ஸ்நி தரி ஸ்ா, ரி | நீ, ஸ் தா, நி தபபா, ம நிதபம ||
வா . ரிப்ப ரு . . . . கும் . . இ . . . ரா . . . மா . . னு . | சன் . என் . . றன் . | மா . நி . தி . . . . யே . . . ||

கரி ஙிரிகம — (உறு பெருஞ் செல்வ)
. . . . —

மனோரதம்

குரு

சேர்மாதேவி என்னும் ஊர் அப்படி ஒன்றும் பெரிதல்ல. இருந்தாலும் வசிப்பதற்கு நல்ல இடம். என் தந்தை கிராமப் பள்ளியில் ஹெட்மாஸ்டர். வருவாய் பெருகிவிடவில்லை. அன்றாட வாழ்க்கைக்கே நெருக்கடியாகத்தான் இருந்தது. எனக்கு உடன்பிறந்தவர்கள் யாருமில்லை. நான் ஒரு பிள்ளைதான். எனவே என் பெற்றோர்கள்வருவாயைக்கொண்டே என்னைக் கூடியவரை செல்லமாகவும், செல்வமாகவும் வளர்த்து வந்தார்கள். கூடியவரை நானும் படிப்பில் சிரத்தை காட்டினேன். பலன் கிட்டிற்று. படிப்பு அநேகமாக 'ஸ்காலர்ஷிப்'பிலேயே முடிந்தது. ஒரு வழியாக பி. ஏ. யை முடித்துவிட்டு என் தந்தையின் வாஸஸ்தலமாகிய சேர்மாதேவிக்கு வந்திருந்தேன். அப்பா அங்கேயே பக்கத்தில் தாம்பிரபரணி ஆற்றுப் பாசனத்தின் அருகில் சொல்ப நிலமும் வாங்கி இருந்தார். வீடும் சொந்தத்தில் இருந்தது. அன்று மாலை என் தந்தையுடன் வயல் வெளிகளைச் சுற்றிப்பார்க்க போயிருந்தேன். வயல்களின் இடையே ஓர் சிற்றோடை போயிற்று. அதன் அருகே ஓர் ஆஜானுபாகுவான மனிதர்—ஒரு யுவதியுடன் பேசிக்கொண்டிருந்தார். அவர்களின் முகபாவத்திலிருந்து பெரிய வருத்தமான ஓர் சம்பவம் பற்றிப் பேசுவது ஸ்பஷ்டமாகப் புரிந்தது. அருகில் இருந்த அப்பாவை விசாரித்தேன். அவர் சொன்னார்:—

அந்த மனிதர் திருவாங்கூரைச் சேர்ந்தவராம். அந்தப் பெண் அவர் தங்கையாம். கல்யாணமாகி ஒரு வருடத்திற்குள் அந்தப் பெண் விதவை ஆகி விட்டாள். தாய்தந்தயரும் இல்லை. அந்த ஒரு சகோதரன் தான். அவனும் வடக்கே, அமிர்தசரசில், போலீஸ் டிபுடி கமிஷனராக இருக்கிறான். தன் சகோதரியின் பரிதாப நிலை கேட்டு, திடுக்கிட்டு வந்திருக்கிறான். அவளை அவன் கூட அழைத்துப் போக வேண்டும் என்கிறானும். அப்பெண்ணுக்கு அவ்வளவு தூரம் போக விருப்பமில்லை. தன் சொந்த அத்தையின் வீட்டிலேயே இருக்கப் பிரியப்படுகிறாள்" என்று என் அப்பா கூறி முடித்தார்.

நான் அவளைப் பரிதாபமாகப் பார்த்தேன். அவள் சகோதரனின் எண்ணத்தை மாற்ற முடியாது என்பதை அவன் குரல் அறிவுறுத்தியது. என் உள்ளத்தில் கிளர்ச்சி ஏற்பட்டது? முன்னேற்றம்? இந்த மான் தளிர் போன்ற மேனி இளவேனிற் கொடிபோன்ற தோற்றம் எல்லாம்......ஏன்... நான் அவளை சீர்திருத்த முறையில்-மறு விவாகம் செய்து கொண்டால்? என் மனம் கேள்வியுடன் நின்றுவிட்டது. வீடு திரும்பினேன்.

அடுத்த வீட்டு வாசலில் ஓர் வண்டி வந்து நின்றது. அந்த இளம் கைம் பெண்ணும் அவள் சகோதரனும் ரயிலுக்குக் கிளம்பி விட்டனர். காரணமின்றி என் மனம் கலங்கிற்று.

மனிதர்களின் மனமே விசித்திர போக்கு உடையது. நியாயமாக கவலை கொள்ள வேண்டிய விஷயத்தில், சிந்தையே செல்வதில்லை. முகமறியாத மனிதர்களை—ஓர் முறை கண்டால்கூட சதா நினைப்பிலும், விழிப்பிலும்கூட அன்னவரின் நினைவு! தோற்றம்! ஏன்? என்று காரணம் கேட்டால் சொல்ல தெரியுமோ? கிடையாது! அந்நிலையே எனக்கும் ஏற்பட்டது. ஆனால்-கால சக்கரத்துக்கு இச்சம்பவமெல்லாம் அணுப்பிரமாணம்தானே? அது சலியாமல் சுழன்றுகொண்டே ஓடிற்று.

படிப்பு முடிந்ததும் உடனே உத்தியோகம் ஆகிவிடவேண்டும். ஐந்தாவது பாரம் படித்தாலும் ஐ. ஸி. எஸ். என்ற நினைவுதான் அவர்களுக்கு! 'விளையாட்டாகப் படிப்பு முடிந்து வருடம் மூன்றாகியும் வேலை கிட்டவில்லை. கடைசியாக ஐக்கியமாகாண காங்கிரஸில் -ஸேவாதள பயிற்சி முகாமில் சேர அநேக தொண்டர்படை வேண்டும் என்றும், சாப்பாடு-இடவசதி - அலவன்ஸ் உண்டு என்று பத்திரிகையில் பார்த்தேன். இது எனக்குப் பெரிதும் உற்சாகத்தை அளித்தது. வீட்டில் உத்தியோகமில்லை என்ற சொல்லை ஓரளவு தவிர்க்கலாம். இரண்டாவதாக என்போன்ற படித்த இளைஞர்களை இம்மாதிரி ஸேவை செய்வதுதானே கடமையும் கூட! நாட்டின் நாகரிகத்தின் சக்தியே இளைஞரின் இதயத்தில் தானே! இடம் பெறவேண்டும். கிளம்பினேன் குறிப்பிட்ட முகாமில்-என்னையும் சேர்த்துக்கொண்டார்கள். மூன்றுமாதம் இடைவிடாமல் உழைத்து பல அம்சத்தில் தேர்ச்சி பெற்றேன். ராணுவம், வைத்தியம், கல்வி பயில்விக்க -போதனா முறை—அநேக துறையில் சேவை புரிய தகுதியானேன்.

* * * * *

என்றையும் விட அன்று பயிற்சி கழகத்துக்குப்போக நேரமாகி விட்டது. காரணம் ஒன்றுமில்லை. மனது ஒரே ஓச்சலாக இருந்தது. நான் எனது முகாமை நோக்கி போனதும். எங்கள் தலைவர் எதிரே வந்தார். "நவகாளியை விட்டு டில்லிக்கு சமாதான தூதராக காந்திஜீ போன சமயம் அது" டில்லியில் ஏகப்பட்ட வகுப்புக்கலவரம்நடந்துகொண்டி-

ருந்தது. தவிர, அகதிகள் வேறு டில்லியில் வந்து குவிந்தவண்ணம் இருந்தனர். அகதிகளுக்குப் போதிய வசதியும்-பாதுகாப்பும் அளிக்கவும் எங்களை ஒரு கோஷ்டியாக டில்லிக்கு அனுப்ப ஏற்பாடாகியது. அதில் தேர்ச்சி பெற்றவர்களாக ஒரு கோஷ்டி அகதி முகாமுக்கு அனுப்பப்பட்டது. நான் குழம்பிய மனதுடன் அச்சிறு கோஷ்டியுடன், விமான மூலம், டில்லியை நோக்கி விரைந்தேன்.



எங்கள் விமானம் டில்லியை அடைந்தபோது, மாலை சரியாக 5 மணி ஆகிவிட்டது. ராணுவ சிறு கோஷ்டியாரால் நாங்கள் வரவேற்கப்பட்டோம். எங்களுக்குப் பிரத்தியேகமாக அமைக்கப் பெற்ற விடுதியில் நாங்கள் போய்ச் சேர்ந்தோம். எங்கள் படுக்கை, போஜன வசதி, எல்லாம் தெரிந்த பின் எங்கள் அலுவல்களையும், திட்டமாகதெரிந்துகொண்டோம். வகுப்புக் கலவரங்களால், பாதிக்கப்பட்டவர்களுக்கு, ரண சிகித்ஸை புரிய டாக்டர், அவருக்குப் பக்க உதவி புரிய நான் இதுவே எனது அலுவல். இரவு போஜனத்திற்குப்பின், 8 மணிக்கு குருக்ஷேத்ரர் அகதிமுகா"முக்கு நாங்கள் சென்றோம். அதன் ஒரு பகுதியில், கட்டிலிலும்-தரையிலும் மனிதர்கள் படுத்திருந்தனர். அவர்களில் பெரும் பகுதியினர் வகுப்பு வெறியர்களால், உடமையுடன், உடலும் தாக்கப்பட்டவர்கள். அவர்களின் பரிதாபகரமான ஹீன சுரம் என் இதயத்தைத் தாக்கியது. சுதந்திரத்தின் கனவை என் மனம் சித்தரித்து பார்த்தது.

அகதிகளுக்கு உபதேசித்த காந்திஜியின் பொன் மொழிகளை ரேடியோ ஒலிபெருக்கிக்கொண்டிருந்தது. அவர் சொல்லை கட்டுப்பாடாகக் கேட்டிருந்தால்? தேசத்தின் இன்றைய நிலை........?

வரண்டாவின் ஒரு கோடியிலிருந்து அய்யோ—அப்பா என்ற தீனக்குரல் என் கவனத்தைக் கவர்ந்தது. அங்கு சென்று பார்த்தேன். தரையில் 22 வயது இருக்கும்-ஒரு பெண் படுத்திருந்தாள். அவள் தலையிலும் முதுகிலும் கட்டு கட்டப்பட்டிருந்தது. அவள் தன் நினைவின்றி முனகினாள். நான் ஓடி டாக்டரை அழைத்து வந்து இன்ஜெக்ஷன் செய்வித்தேன். இரவு சரியாக 12 மணிக்குக் கண் விழித்தாள். நான் அருகிலேயே இருந்தேன். என்ன வேண்டும்! உடம்பு எப்படி இருக்கிறது? என்றேன். அவள் சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தாள். மேலும் நான் நீ எந்த ஊர்? என்றேன். அவள் சொன்னாள்.

சமீபக் கலவரத்தில் 'அமிர்த சரஸ்' எரிந்ததே? தெரியுமா? அதில் என் வீடும் ஒன்று. என் அண்ணன் பெரிய போலீஸ் உத்யோகஸ்தர். அவர் (அண்ணன்) மனைவி சொத்து, வீடு, எல்லாம் போயிற்று. நான்மட்டும் எப்படியோ தப்பினேன். இந்த அனுதாஸ்ரமத்திற்கு வந்து சேர்ந்தேன் என்று அவள் தேம்பினாள்.

உனக்குச் சொந்த ஊர்?

நான் திருவாங்கூரைச் சேர்ந்தவள். நான் வாழ்க்கைப்பட்டது சேர்மாதேவி.

சேர்மாதேவியா? உனக்கு கணவன் இல்லை அல்லவா? என்று என்னையும் அறியாமல் கேட்டுவிட்டேன். அவள் கண்களில் நீர் மல்கி நின்றது. அவள் என்னை ஆதூரத்துடன் பார்த்தாள்.

அவள் இனி அனாதை. அவளை ஆதரித்து, ரக்ஷிக்கவேண்டிய கடமையும், பொறுப்பும் என்னைச் சேர்ந்தது. மூன்றுவது வருடத்திற்குமுன், நினைத்த என் மனோரதம் இன்று பூர்த்தியாவதை உணர்ந்து என் மனம் உவகை கொண்டது. அன்புடன் அவள் கரத்தை எடுத்து, மடியில் வைத்துக் கொண்டேன். அவள் தன் பூரண சம்மதத்தைத் தெரிவிக்கும் தோரணையில் பதிலுக்கு என் கைகளை இருகப்பிடித்தாள்.

ஞாபகப்படுத்துகிறோம்

★

" சுதேசமித்திரன் " வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.

நாமொன்று நினைக்க—

ய. மஹாலிங்க சாஸ்திரி எம்.ஏ., பி.எல்.

ஸ்ரீமான் வெங்கிட சுப்பையர் அன்று ஆபீஸிலிருந்து சற்று சீக்கிரமாகவே வீட்டிற்கு வந்தார். அவர் தற்செயலாய் பாங்கு மானேஜருடன் டெலிபோனில் பேச நேர்ந்தபோது காலையில் மாற்றப்பட்ட செக்கைப்பற்றி அறிந்துகொண்டார்.

"தொகை பெரியதல்லவா? அதனால் பிரஸ்தாபித்தேன்"

"யார் வாங்கினது?"

"ஸீதாராமன். அவன் பேருக்குத்தானே எழுதியிருந்தீர்கள்?"

"ஆமாம் ஆமாம்"

"பணம் கைக்குவந்ததல்லவா?'

"அதற்கென்ன வந்துவிடும்"

"ஏன் ஒன்றும் சந்தேகமில்லையே?"

"உங்களுக்கு ஒன்றும் சந்தேகமாகத் தெரியவில்லையே?"

"ஹ ஹ ஹ. வழக்கமாய் செக் மாற்றுகிற பையன்தானே?"

"ஆமாம் கையெழுத்தைப் பற்றிக் கேட்டேன்."

"ஹ ஹ ஹ இந்தத்தடவை சரியாகவிருந்தது"

வீட்டிற்கு வந்ததும் வெங்கிட சுப்பையர் தன் டிராயர் கைப்பெட்டிகளில் செக் புஸ்தகத்தைத் தேடினார். அது அகப்படும் முன் சங்கரியம்மாள் சிற்றுண்டிக்கு அழைத்தபடியால், உள்ளே சென்றுவிட்டார். சங்கரியம்மாள் பிரஸன்னமாக விருக்கவில்லை.

"ஏன்? என்ன சமாச்சாரம்?"

"ஏன் ஒரு சமாசாரமுமில்லை. மச்சினன் வந்திருக்கானே இரண்டு நாளாய், என்ன ஏது என்று விசாரிக்கப்படாதோ?"

விசாரிக்காமல் என்ன? உள்ளே கூப்பிடேன் டிபன் எடுத்துக் கொள்ளட்டும்"

"டிபன் அவனுக்கு ஆகிவிட்டது. நீங்கள் போய் பேசிக்கொள்ளுங்கள்"

"ஏன் ஏதாவது காரியமாய் வந்திருக்கானோ"

"காரியம்தான். நீங்கள் அவன் மூலமாய் ஏதோ நிலம் வாங்கப் போகிறதாய்ச் சொன்னேளாமே"

"வேறு வேலையில்லை"

"இல்லாவிட்டால் அவனுக்கு ஒரு வைர பேஸரி வாங்கிக்கொடுக்கிறீர்களா?"

"பணம் எங்கேயிருக்கு?"

"உங்கள் பாங்கில் இல்லையோ?"

"அவன் போட்டு வைத்திருக்கிறானா?"

"நீங்கள் போட்டு வைக்கவில்லையோ?"

"எவ்வளவு ரூபாய்?"

"ஆயிர ரூபாய்க்குக் குறைந்தால் நன்றாயிருக்குமோ?"

"சரிதான். செக் எழுதியனுப்பியது அவன்தான் என்று சொல்லு"

"ஏது செக்?"

"பின்னே நீ என்ன சொன்னாய்?"

"நீங்கள் என்ன சொன்னீர்கள்?"

"நான் இன்று, என்னை அறியாமல் பாங்கில் மாற்றப்பட்ட செக்கைப்பற்றிச் சொன்னேன். அது விஷயம் உனக்குத் தெரியுமா?"

"எனக்கு ஒன்றும் தெரியாதே! நான் ஏதோ விளையாட்டாகவல்லவா பேசினேன்—யார் மாற்றினார்கள்?"

"ஸீதாராமன் மாற்றியவன். என் கையெழுத்தைப் போட்டது யார் என்று தெரியவேணும்."

"ஐயய்யோ! எத்தனை ரூபாய்!"

"சப்தம் போடாதே—ஆயிரம்"

"போர் ஜரியா"

"சரி. அப்புறம் பேசிக்கொள்வோம். செக் புஸ்தகத்தைத் தேடிக்கொண்டிருந்தேன். அதுவும் அகப்படவில்லை. ஏதோ நடந்திருக்கிறது. நீ ஒன்றும் பேசாதே. நான் பார்த்துக்கொள்கிறேன்."

"போலீஸில் தெரிவித்தீர்களா?"

"செட்! போலீஸாவது மண்ணாங்கட்டியாவது. எதற்காக போலீஸ்? நீ பேசாமல் இரு. உனக்குத் தெரிந்ததாகவே காண்பித்துக் கொள்ளக்கூடாது! எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்"

"ஸீதாராமன் நல்ல பிள்ளையாச்சே"

"அவனை யாரோ மோசம் பண்ணியிருக்கிறார்கள்"

"சிவராமன் உங்களூம் வழி போகவில்லையே"

"சீச்சீ! யானை படுத்தாலும் ஆள் உயரமிருக்குமல்லவா? அவன் கொடுக்கிறவனே ஒழிய எடுக்கிறவனாகமாட்டான்"

"நம்ம பிள்ளையிருக்கோ இல்லையோ—தத்தாரி"

"சரி அதற்கு மேல் பேசாதே"

"இப்படியிருந்தால் எப்படிக் காலம் தள்ளுகிறது?"

"அதைப்பற்றிக் கவலைப்பட்டு என்ன பிரயோஜனம்?"

"நீங்கள் இதை வெறுமனே விடப்படாது. இன்றைக்கு ஆயிரம் நாளைக்கு இன்னும் எவ்வளவோ." "நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டியதுதான்" "என்ன ஜாக்கிரதையாயிருக்கிறது. இவனுக்கெதற்கு திடீரென்று ஆயிரம் ரூபாய் பணம்? அதையாவது தெரிந்துகொள்ள வேண்டாமா?"

"ஒன்றும் அவசரப்படாதே. நீ திடீரென்று எதையாவது கேட்டு வைக்காதே அவனை"

"நான் ஏன் கேட்கிறேன்—நான் கேட்டால் அது எனக்கு வழியாய் பதில் சொல்லுமா? எல்லாம் நீங்களே விசாரியுங்கள். ஏதாவது தப்புத் தண்டா இருந்தால் கண்டிக்காமல்மட்டும் விடப்படாது. பிற்பாடு நம்ம பேரைத்தான் சந்தியில் இழுத்து விடும். பணம் போனாலும் பாதகமில்லை"

ஈச்வரன் அதிகப் பணத்தைக் கொடுத்தால் அதற்குத் தகுந்த வடிமடையையும் அமைக்கத் தவறுவதில்லை—சரி—எனக்குப் போரும் காபியைக்கொடு—கூடத்தில் அந்தக் குட்டிகள் வந்துவிட்டாப்போலிருக்கிறது. ஒன்றும் அமர்க்களம் வேண்டாம்—ஜாக்கிரதை. மதுரப்பாட்டி எங்கே?'

"எங்கேயாவது ஓட்டுக் கேட்டுக்கொண்டிருப்பாள்."

"நம் வீட்டுக்குள்ளேயே நாம் எவ்வளவு ஜாக்கிரதையாயிருக்க வேண்டியிருக்கிறது....காப்பிக்கு சக்கரை போடவில்லை."

"மறந்துபோய் விட்டேன். எனக்குப் புத்தி சரியாயில்லை"

"கூடத்தில் என்ன அமர்க்களம்?"

'சிவராமனுக்குக்காதும்காதும் வைத்தால் போல் ஒரு காரியத்தை செய்வது என்பதே தெரியாது. ஆனாலும் இத்தனை கோபமும் ஆத்திரமும் இருந்தால் எப்படி அந்த மனுஷ்யனுடன் காலம் தள்ளுகிறது? அந்தப் பெண்ணைப் பிடித்து இரைகிறான் போலேயிருக்கு"

"செல்லத்தையா?"

"ஆமாம். அது என்னத்தைக் கண்டது? எவனோ காலாடிப்பயல் ஒரு கடிதாசை எழுதி அவள் புஸ்தகத்தில் வைத்திருக்கிறான். பள்ளிக்கூடத்தில் கேட்கவேண்டுமா? இந்த எழவு பள்ளிக்கூடத்தில் படிப்பா சொல்லிக்கொடுக்கிறான்? இதுதான் படிப்பு! இதுகளை நாளைக்கே நிறுத்திவிட்டாலும் தேவலை. என்ன பேத்தலும் பிடுங்கலும்."

'காதல் கடிதமோ? ஆனால், என் காலத்தில் நடந்தது மாதிரித்தான் இப்போதும் நடக்கவேண்டுமென்கிறாயோ? பெண்கள் சுதந்திரம் வந்ததற்கு அடையாளம் காதலன் அவள் கால்களில் விழுந்து புலம்பிப் புலம்பி அவளை மணக்கிறான்."

"அவனைக் கட்டேலே வைத்தது!"

"சரி நான் மாடிக்குப் போய் விடுகிறேன். என் காதிலே ஒன்றையும் போடவேண்டாம்."

"நானா போடப்போகிறேன்."

"இல்லாவிட்டால் "காரை" எடுத்துக்கொண்டு எங்கேயாவது வெளியிலே போய்விடட்டுமா."

"வேண்டாம் வேண்டாம்—இன்று ஒரு நாளைக்குக் காலாகாலத்தில் ஆத்துக்கு வந்திருக்கிறீர்கள். சிவனே என்று மாடியில் போய் சிரமபரிகாரம் செய்துகொள்ளுங்கள். உங்களிடம் ஒருவரும் மத்யஸ்தத்திற்கு வராமல் நான் பார்த்துக்கொள்கிறேன்."

* * * * *

கூடத்தில் விசாரணை கடுமையாகவிருந்தது. சிவராமன் செல்லத்தினிடத்தில் கடிதத்தைக் கொடுத்துவிட்டு,

1. "இது எப்படி உன் புஸ்தகத்தில் வந்தது?"

2. "இதற்கெல்லாம் இடம் கொடுக்கலாமா?"

3. "எழுதினவனை சித்திரவதை செய்து விடவேண்டாமா?"

4. "உபாத்யாயர்கள் எதற்கு இருக்கிறார்கள்?"

5. "ஹெட்மாஸ்டர் கையாலாகாதவனா?"

6. "உன்னைத்தானா பார்த்தான் அந்த அயோக்கியன்?"

7. "அவனுக்கு அப்பன், ஆயி, கூடப்பிறந்த பெண்கள் ஒருவரும் கிடையாதா?"

8. "வெந்த உள்ளமாவது வேகாத உள்ளமாவது?"

9 "எனக்கு அவன் யார் என்று சொல்லு. இன்று இரவே சூர்ணம் செய்து விடுகிறேன்."

10. "பெண்கள், அப்படி, ஏன் என்று கேட்பாரற்றுப் போய் விட்டார்களா?"

11. "என்ன அநியாயம்! என்ன அக்ரமம்! என்ன துணிச்சல்! என்ன மானக்கேடு!"

12. "போதும் நீ படித்தது—"

13. "புறப்படு ஊருக்கு இப்போதே"

என்றபடியெல்லாம் இடைவிடாமல் கர்ஜித்தார்.

செல்லம் கடிதத்தைப் படித்துக்கொண்டே மனதில் மேற்படி ஒவ்வொரு கேள்விக்கும் பதில் சொல்லிக்கொண்டாள்.

1. "இது கி. மு. வால் புஸ்தகத்தில் வைக்கப்பட்டது. நீண்ட முன் யோசனையினால்தான் அவனால் அப்படிச் செய்ய முடிந்தது."

2. "என்னை கேட்டுக்கொண்டா அப்படிச் செய்தான்?" நான் இடம் கொடுக்கவாவது?



3. "காதல் கடிதம் எழுதுவது காலித்தனம்தான்; ஆனால் முத்துஸ்வாமி? அவனே இதை எழுதும்படி அவ்வளவு தூண்டுதலுக்கு என் அழகுதான் காரணம்!"

4. "உபாத்யாயர்களே காதல் கடிதம் எழுத மாட்டார்களா என்ன?"

5. "கலப்புப் பள்ளிக்கூடங்களில் ஹெட்மாஸ்டர் ஈச்வரனாயிருந்தாலும் கையாலாகாதவனாய்தான் இருக்கவேண்டிவரும்"

6. "அவன் யோக்யன்தான். நானும் அழகிதான். என்னைத் தவிர வேறு ஒரு பெண்ணையும் முத்துஸ்வாமி தூசிவிலைக்குமதிக்க மாட்டான் என்பது திண்ணம்!"

7. "அவனுக்கு எல்லா பந்துக்களும் இருந்தாலும் பெண்டாட்டி வேண்டியதுதானே. இது என்ன கேள்வி?"

8. 'கவிதையும், கற்பனையும் உள்ளவர்களுக்குத் தெரியும் வெந்த உள்ளம் எப்படி ஏற்படுகிறதென்பது.'

9. "முத்துஸ்வாமியை, சூர்ணமாக்கப்படுவதற்கு நான் காண்பித்துக்கொடுக்கமாட்டேன்"

10. "ஏனென்று கேட்பார்கள் இருப்பதினால்தான் ஒருவன் வெந்த உள்ளமாகிறான்"

11. "உங்களுக்கு மாப்பிள்ளை என்று ஒருவன் வந்தால் அவன் எப்படியிருப்பானென்று நினைப்பு? அநியாயமென்ன? அக்ரமமென்ன? துணிச்சலென்ன? மானக்கேடென்ன? இதுதான் பெண்களின் வெற்றி!"

12. படிப்பை நிறுத்துவது பற்றி எனக்கும் சம்மதம்தான். முன்காலத்தில் பிள்ளைகளுக்குக் கல்யாணப்படிப்பென்று பரிகாசமாய்ச் சொல்லுவார்கள். இந்தக் காலத்தில் உண்மையாகவே பெண்கள் படிப்புக் கல்யாணப் படிப்புதான்."

13 "ஊருக்குப் புறப்படுகிறேன்—முகூர்த்தத்தைப் பாருங்கள்."

காந்திமதியும் செல்லத்துடன் வெந்த உள்ளத்தின் கடிதத்தை வாசித்து வாசித்து மகிழ்ந்தாள். இந்தக் கவிதையை அவனைத்தவிர வேறு யாரால் எழுத முடியும்! எதற்காக முத்துஸ்வாமி அந்த லைப்ரரிபுத்தகத்தைப் பற்றியும், அதில் தான் வைத்துவிட்ட முக்யமான கடிதத்தை பற்றியும் அன்று சாயங்காலம் தன்னைத் தனிமையில் சந்தித்து அவ்வளவு அக்கரையுடன் பேசினான் என்பது செல்லத்திற்குப் புரிந்தது. காந்திமதியும் அவளும் ஒரு கடைக் கண் நோக்கையும் புன் சிரிப்பையும் அந்தரங்கமாய்ப் பரிமாறிக்கொண்டார்கள். இந்தக் கடிதத்தை முதல்நாளே பார்த்திருந்தால், தான் முத்துஸ்வாமியிடம் எப்படி நடந்துகொண்டிருக்கக்கூடும் என்று செல்லம் கல்பனா திருஷ்டியால் காண முயன்றாள். தான், எழுதியவரை அறியாது அந்தக் கடிதத்தைப் பார்த்திருந்தால், அது தன் கோபத்தையும் வெறுப்பையும் தான் மூட்டியிருக்கும் என்று அவளுக்குப்பட்டது. முத்துஸ்வாமி தன்னை நேரில் சந்தித்தபோது கூக்குரல் போட்டு அவனை மிரட்டியிருக்க நேர்ந்திருக்குமென்று தெளிந்தாள். அக்கடிதத்தை ஞாபகமூட்ட அவன் பேசிய தந்திரமான வார்த்தைகளுக்கு அவனை மெச்சினாள். அதைத் திருப்பிக்கொடு என்று கேட்டதற்கு தன் உள்ளத்தைப் பரிசோதிப்பதே நோக்கமென்று தீர்மானித்தாள். புத்திசாலியாயிருப்பவன்—"நான் உனக்குக் காதல் கடிதம் எழுதியிருக்கிறேன். அதைப் பார்—எனக்குப் பதில் தெரிவி" என்று சொல்லு

வான்? என்ன சமத்காரமான வழியை முத்துஸ்வாமி பின்பற்றியிருக்கிறான்! ஒருவாரம் முன்னதாகவே நான் பெயர் கொடுத்திருந்த புஸ்தகத்தை அறிந்து அதில் கடிதத்தை வைத்தது எவ்வளவு முன் யோசனை! ஒருவேளை என் எதிர்ப்பிற்குப் பாத்திரமானால் தப்பித்துக்கொள்ள என்ன தந்திரம்! புஸ்தகத்தை நேரில் கொடுக்கவில்லை. சொந்தப் புஸ்தகமுமில்லை. லைப்ரரி புஸ்தகம். எதிர்ச்சையாய் நான் எடுத்தது. வேறு யாரும் அதேபோல் எடுத்திருக்கலாமல்லவா? மேலும் புஸ்தகத்தில் தட்டுக்கட்டு ஏதோ கடிதத்தை வைத்து விட்டாராம்! அதைத் திரும்பிப் பெற வேண்டுமாம்! நான் கடிதத்தைப் பார்த்தேனா பார்க்கவில்லையா-பார்த்திருந்தால் அதைப்பற்றி என் அபிப்ராயம் என்ன என்ற ஆராய்ச்சிக்கு எவ்வளவு நாசூக்கான வழி! அதை நான் பார்க்காவிட்டால் என்னைப் பார்க்கச் செய்யும் உபாயம் எவ்வளவு உசிதமானது! அது கெட்டுப்போய் விடவில்லையா என்று தெரிந்து கொள்வதில் கவலை! அதைத் தாமதிக்காமல் பெற வேண்டுமாம்! வேறு யாராவது பார்த்துவிடப் போகிறார்கள் என்ற அச்சமல்லவா அது! முத்துஸ்வாமி நினைத்தபடியே ஆகிவிட்டது! "தானே தவறு செய்து விட்டாராம்! அது குற்றமாகும் முன் அதை அவர்கைப்பற்றிக்கொள்ள வேண்டுமாம்! என்ன பாசாங்கு! அதற்காக அவர் நேரில் வருவாராம்! எங்கள் பின்னேயே நடந்து வந்தார் பாவம்! நாளைக்கே என் புருஷனாகி விட்டால் இவ்வளவையும் சொல்லிக் காண்பிப்பாரல்லவா!"

"போரும் படித்தது! பாடப் புஸ்தகமோ! ஔவையார் பாட்டோ! நளவெண்பாவோ!"

"இல்லை மாமா! பெரிய புராணம்" என்றாள் காந்திமதி சிரித்துக் கொண்டு.

"ஆமாம் புராணமாகத்தானிருக்கிறது. கிழித்து எறி அந்த சனியனை" என்று மாமா காகிதத்தைப் பிடுங்க வந்தார்.

காந்திமதி தந்திரமாய் அதைத் தன் கையில் வாங்கிக்கொண்டு, "ஆளைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் தஸ்தவேஜி கைவசம் வேண்டாமா-" என்றாள் முன்னிலும் அதிகமாகச் சிரித்துக் கொண்டு, "ஆளைக் கண்டுபிடிப்பது சிரமமில்லை. ஆள் உள்ளேயே இருக்கிறான். நான் ஆளைக் கண்டு பிடிக்கவும் கண்டுபிடிப்பேன். அதற்குமேல் செய்யவேண்டிய சிக்ஷைகளையும் செய்வேன். ஆனால் உங்களுக்கு மனதாகாது. நம்பிக்கை வராது."

"எனக்கென்ன வந்தது மாமா! நீங்கள் பேஷாய்க் கண்டு பிடியுங்கள். சிக்ஷியுங்கள். செல்லத்திற்கும் எனக்கும் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை."

"ஆனால் நானாகக் கண்டுபிடித்தாலொழிய நீங்கள் ஆளைச்சொல்லப்போவதில்லை?"

"தெரிந்தாலல்லவா சொல்வதற்கு? தெரிந்தால் சொல்லாமலிருப்போமோ!"

"உங்களுக்குத் தெரியாமலா இருக்கும்? சந்தேகமாவது ஓரிடத்தில் ஏற்படக்கூடுமல்லவா?"

"எங்களுக்குத்தெரியும் என்றால் எங்களையும் குற்றவாளிகளாக்குகிறீர்களா? எங்களுக்குத் தெரியவே தெரியாது. திருட்டுத்தனமாகத்தானே இந்தக்கடிதங்கள் சேர்ப்பிக்கப்படுகின்றன."

"வெளியிலிருந்து திருடன் வரமாட்டான். இப்படிக் கடிதம் எழுதவும் அதைச் சேர்ப்பிக்கவும் வெளித் திருடனுக்குச் சௌகரியம் கிடையாது."

"அப்போ, உங்களுக்குத்தெரியும்போலிருக்கு!"

"தெரியும். சற்றுநேரத்தில் இங்கேயே வருவான். அப்போது என்ன நடக்கிறது பார்" மாமா செல்லத்தின் பக்கம் திரும்பினார். "நீ ஊருக்குப் புறப்பட தயாராகிவிடு" என்றார்.

செல்லத்தின் முகத்தில் திடீரென்று பயமும் பரபரப்பும் தோன்றியது. மாமாவின் பயமுறுத்தலாலல்ல. "கேட்டி"ற்கு வெளியே முத்துஸ்வாமி வந்து தோட்டக்காரன் பொக்கையனிடம் ஏதோ விசாரித்துக்கொண்டிருந்தான். செல்லம் காந்திமதியைப் பிரார்த்திக்கும் முறையில் பார்த்தாள். காந்திமதி வெளியே செல்ல ஒரு அடி எடுத்து வைத்தாள். தந்திரமாக வெந்த உள்ளத்தின் கடிதத்தை செல்லம் காந்திமதியின் கையிலிருந்துபற்றி இழுத்தாள். காந்திமதி கேள்விக்குறியுடன் செல்லத்தை நோக்கினாள். செல்லம் கடிதத்தை வாங்கித் தன் மடியில் ஒளித்துக் கொண்டாள். காந்திமதி கடிதமில்லாமல் தன் தூதை நிறைவேற்றவேண்டிய அவசியத்தை உணர்ந்து சிந்தனை செய்துகொண்டு தோட்டத்திற்குப் போனாள். காவல்காரனை அழைத்து, "அந்த ஐயர் இப்போது இங்கு தென்பட்டால் ஆபத்து நேரிடும், உடனே ஓடிப் போகச் சொல்" என்று எச்சரித்து விட்டுத் திரும்பினாள். முத்துஸ்வாமி நழுவிவிட்டதைக் கண்டு இருவரும் மகிழ்ந்தார்கள்.

(தொடரும்)

கட்டுரையாளருக்கு

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதும் நண்பர்கள், தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறோம். குறிப்பாகச் சுட்டிககாட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ குறிப்பிடாமல் விடுக்க வேண்டும்.

—ஆசிரியர்.

பெருமையின் சின்னம்

கோமதி ஸ்வாமிநாதன்

மருத முத்துவின் குதிரைவண்டி சுருதியை விட்டு விலகும் சாரீரம் போல், தெருக்கோடியின் திருப்பத்தில், ஆடி அசைந்து கொண்டு அப்போதுதான் திரும்பியது. ரயில்வே ஸ்டேஷனிற்குப் போவதற்காக, வண்டியை எதிர்பார்த்து, கை கடிகாரத்தையும், தெருக்கோடியையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டு, தலை தீபாவளிக்கு மாமனார் வீட்டிற்குப் போயிருக்கும் பிள்ளையாண்டான், தீபாவளி தேவதையை தனிமையில் டிபன் காப்பியுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது போல் நின்றிருந்த எனக்கு, மருதமுத்துவின் குதிரைவண்டி எழுத்தாளர்களுக்கு எதிர்பாராமல் வரும் சன்மான மணியார்டர் அளிக்கும் ஆனந்தத்தைக் கொடுத்தது.

அவன் நம்மிடம் வரும்வரை காத்திருந்தால் ஒரு வேளை நாளை ரயில்தான் கிடைக்கும் என்ற பயத்சால், கையில் சூட்கேசுடன் நானே அவன் வண்டியை நோக்கி நடந்தேன்.

"ஏய் மருதமுத்து! ஸ்டேஷனுக்குப் போகவேண்டும். வண்டி விடுகிறாயா?" என்றேன். பிரபல ராஜபார்ட் நடிகர் 'என்ட்ரன்ஸ்' பாட்டிற்கு தயார் செய்து கொள்வது போல் தொண்டையைக் கனைத்துக்கொண்டு மீசையை முறுக்கிக்கொண்டு "ஏறுங்க சாமி!" என்றான்.

"என்ன வாடகை வேண்டும்?"

"அதெல்லாம் உங்களுக்குத் தெரியாததா? ஏறுங்க சீக்கிரம்!"

"இந்தா மருதமுத்து! அப்புறம் தகராறு உதவாது. முன்னாலேயே கறாராக எவ்வளவு என்று சொல்லிவிடு"

"என்ன சாமி புதிசாகப் பேசறீங்க! ஒண்ணரை ரூபாய்வாடகை என்றுதான் ஏற்பட்டுப் போச்சுங்களே!"

எனக்கு மயக்கம் போடவில்லை! இரண்டு பர்லாங் தூரத்திற்கு ஒண்ணரை ரூபாய் கேட்பது மருதமுத்துவிற்கு சகஜம். கேட்பதற்கும் இடையே உள்ள அகண்ட வித்தியாசமும் அவனுக்குத் தெரியும். இரண்டு நாளைக்கு முன்னால் தான் நாலணுவாடகைக்கு என்னை ஸ்டேஷனுக்கு ஏற்றிப் போயிருக்கிறான். அதை மறந்து இன்று திடீரென்று ஒண்ணரை ரூபாய் என்ற அறிவிப்பைப் போட்டான். மருதமுத்துவிற்கும் எனக்கும் வருஷக்கணக்கில் பழக்கம்தான்! இருந்தாலும் ஒவ்வொரு தடவையிலும் இந்த வாடகை டிராமா நடக்கும் நாட்கள் ஓடுவதுபோல் ஸ்டேஷனும், ஊரைவிட்டு தள்ளி தள்ளி ஓடிப் போய்விடவில்லை.

"மருதமுத்து! இப்போது வண்டியை வாடகைக்குத்தான் பேசுகிறேன். விலைக்குக் கேட்கவில்லை" என்றேன்.

"சரி சாமி! ஏறுங்க! ஓரணா குறைச்சுக் குடுங்க! நேரமாகுது!"

"ஏய்! முந்தா நாள் நாலணுவிற்கு வந்ததை மறந்துவிட்டாயோ!" மருதமுத்து சிரித்தான்.

"சாமி! அதுதான் தெரிஞ்சிருக்கே! பிறகு எதற்காக இன்றைக்கும் வாடகை என்னன்னு கேட்கறீங்க?"

"கேட்காமல் ஏறிவிடுவேன்! அங்கே ஸ்டேஷன்லே போய் நாலு பேர் முன்னாலே, ஒரு ரூபாயைக்கொண்டு வா, இரண்டு ரூபாயைக் கொண்டுவா என்று கலாட்டா செய்வாயோ என்ற பயம்தான்!"

"என்னசாமி! இந்த மருதமுத்துகூட வருஷக்கணக்காகப் பழகறீங்க! அப் படியுருந்துமா ஆள் நிதானம் தெரியலே! நான் போக்கிரிக்குப் போக்கிரி. நல்லவனுக்கு நல்லவன்! ஏறுங்க சாமி! நேரமாகுது.

ஒரு தினுசாக வண்டி கிளம்பியது.

* * * *

எங்கள் ஊரில் எத்தனையோ ரக குதிரை வண்டிகள் இருந்தும், மருதமுத்துவின் குதிரை வண்டி பிரத்யேக ரகத்தைச் சேர்ந்தது. அதனுடன் ஒப்பிட எங்கள் வட்டாரத்திலேயே வேறு வண்டி கிடையாது. அதற்கு இணை அதுதான்! உடனேயே, அது புத்தப்புதிதாகவும், பிரமாதமான சிங்கார வேலைப்பாடுகளும் குஷன்களும் கூடியதாக வாசகர்கள் கற்பனை செய்து மானசீகமாக அதில் சவாரி செய்ய ஆரம்பித்துவிடக்கூடாது? அது சாதாரண வண்டிதான். மருதமுத்து அதற்கு அழகுபடுத்தியிருப்பதைப்பார்த்தால், ஐம்பது வயதைக் கடந்த சினிமா நக்ஷத்திரம், பதினெட்டு வயதுள்ள அப்ஸரஸ் போல் இருக்கவேண்டுமென்று நினைத்து 'மேக்கப்' போட்டுக்கொண்ட தினுசில் இருக்கும். அதாவது, பழமையும், புதுமையும் ஒத்துப்போக மறுக்கும். மருதமுத்து திடீர் திடீரென்று வண்டிக்கு கலர் மாற்றுவான். "மருதமுத்துவின் வண்டி அந்த பச்சைக் கலர் வண்டி" என்று நிச்சயமாய் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. ஏனென்றால் போன மாதம் பச்சை வண்டியாக இருந்தது இந்த மாதம் சிவப்பு வண்டியாக இருக்கும். நாளைக்கே அது நீலவண்டியாக மாறினாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை! அரசியலில் தினசரி ஒரு கக்ஷியிலிருந்து மற்றொரு கக்ஷிக்குத் தாவும் பிரமுகர்கள் ரகத்தில் சேர்ந்தது அவன் வண்டி! என்னதான் விதவிதமாய் கலர் பூசினாலும் அந்த வண்டிக்கே பிரத்யேகமான கடகடா சப்தம் மாத்திரம் ஒரேமாதிரியாக மாறாமல் இருந்து வந்தது. மற்ற வண்டிகளெல்லாம் சாட்டைக் குச்சியை சக்கரத்திற்குள் விட்டால்தான் கடகடவென்று சப்தம் கேட்கும். ஆனால் மருதமுத்து வண்டியின் 'ஸ்பெஷாலிடி' என்னவென்றால், சாட்டைக் குச்சி உதவியில்லாமலேயே அந்தச் சப்தம் கேட்கும். அதைப்பற்றி

அவனிடம் ஏதாவது கேட்டால் சர்வ அலக்ஷியமாக "மூணே முக்காலணா வாடகைக்கு வண்டி ரோல்ஸ்ராய்ஸ்கார் மாதிரி இருக்கணும்னால் முடியுமா?" என்பான். இது கொஞ்சம் கோபவேளையாக இருக்கும்போது வரும்பதில். சாந்த ஸ்வரூபமாக இருந்தால் 'என்னங்க! எல்லாருடைய வண்டிகளைப்போலே இருந்துட்டா அப்புறம் நமக்கென்ன மதிப்பிருக்கும்? இப்படி டமாரம் அடிக்கிறதாலே மருதமுத்து வண்டி போகுது என்று ஸ்பெஷலாய் தெரியும்" என்பான். ஆகவே அவன் வண்டி நாளொரு கலரும் பொழுதொரு சப்தமுமாக இந்தப் பூவுலகில் தன் வாழ்க்கைச் சக்கரத்தை வாடகைக்காக ஓட்டி வந்தது.

மருதமுத்துவின் குதிரையைப் பற்றி நான் நாலு வார்த்தை சொல்லாதபோனால் அது ஒரு வேளை என்மீது வஞ்சம் தீர்த்துக்கொண்டாலும் கொள்ளும்! எப்போதாவது அவசரமாய் ரயிலைப் பிடிக்கப் போகும்போது அது சண்டித்தனம் செய்து, வண்டியை வந்த திசையை நோக்கியே தள்ள ஆரம்பித்தால் நான் எப்படி ரயிலில் ஏறமுடியும்? மனிதர்களின் பேச்சு மருதமுத்துவின் குதிரைக்குப் புரியும் என்றுதான் என் அபிப்பிராயம். அன்றொருநாள் "என்னப்பா! குதிரை காற்றாய் பறக்குது!" என்று இடக்காய் மருதமுத்துவிடம் சொன்னேன். அவ்வளவுதான்! மணிக்கு இரண்டு மைல் வேகத்தில் போய்க்கொண்டிருந்த அந்தக் குதிரை, ஒரு நாளுக்கு இரண்டு மைல் வேகத்தில் பறக்க ஆரம்பித்தது! ஸ்டேஷனை நோக்கி அல்ல! அதற்கு எதிர்ப்புறமாக! நான் வாய்திறவாமல் இறங்கி நடந்தேன். என்னையாவது இதோடு விட்டது. "என்னப்பா! டெர்பி ரேசுக்கு உன் குதிரையை அனுப்பக்கூடாதா" என்று கேலியாகக் கேட்ட மைனர் முதலியாரை, வண்டியை கவிழ்த்து பலவந்தமாக வெளியே தள்ளிவிட்டது!

குதிரை, மழமழவென்று ஆஜானுபாகுவாக அங்கலக்ஷணங்களுடன் இருக்குமென்று நினைத்துவிடாதீர்கள்! மருதமுத்து செய்த பூர்வஜன்ம பூஜாபலத்தினால்தான், சர்க்கார், அதை பொது ஜன உபயோகத்திற்காகப் பறிமுதல் செய்து கண்காக்ஷிசாலையில் வைக்கவில்லை. பஞ்சத்திற்கு உதாரணம் சொல்ல வேண்டுமானால் அந்தப் பஞ்ச கல்யாணிக் குதிரையைத்தான் சொல்லவேண்டும். அதன் உடலில் இருக்கும் சகல எலும்புகளும் எக்ஸ்ரே படம்போல் வெகு தெளிவாகத் தெரியும். சற்று பலமான காற்று அடித்தால் அது சொந்த முயற்சி இல்லாமலேயே பறக்கும் யாரோ சில அரைகுறை ஆராய்ச்சியாளர்கள் "இது குதிரை வர்க்கத்தைச் சேர்ந்ததல்ல; அண்டார்டிக் தீவுகளில் காணப்படும் 'குருதை' என்னும் ஆதிகாலத்து மிருகத்தின் பரம்பரையில் வந்தது" என்று சொன்னார்கள். இதைக் கேட்ட சில பேர் 'மருதமுத்து குருதை வண்டி' என்று பிராசத்துடன் பேசலாயினர். அதற்கு, ஒரு பின்னங்கால், மற்ற கால்களைவிட சற்று குட்டை! ஆகையால் அது நடக்கும்போதோ, ஓடும்போதோ, தண்ணீர் பம்பு அடிப்பதுபோலிருக்கும். ஆனால், குதிரை நொண்டியாயிருந்தாலும் சண்டித்தனத்திற்குக் குறைச்சல் இல்லை!

அதன் அங்க லக்ஷணங்கள் எப்படியிருந்தாலென்ன? ஆகாகான், தன் ரேஸ் குதிரைகளுக்குச் சலுகை காட்டுவதுபோல் மருதமுத்து அதற்குச் செல்லம் கொடுத்து வளர்த்தான். வண்டிக்கு ஏற்ற குதிரை, குதிரைக்கு ஏற்ற வண்டி! அவன் பெருமையை அளவிட முடியுமா என்ன? கொஞ்சும்போது கொஞ்சினாலும், கோபம் வந்தால் ஒருகை பார்த்துவிடுவான் சவுக்கால். அப்போது சோகரசம் ததும்ப நொண்டி நொண்டி ஓடும் அந்தக் குதிரையிடம், பெரிய பெரிய சினிமா நக்ஷத்திரங்கள் கூட சோக நடிப்புக்குப் பிச்சை வாங்கவேண்டும்.

மருதமுத்து ஒரு குஷிப்பேர் வழி! உலக வியவகாரங்கள், அரசியல் சினிமா, பொருளாதாரம் எல்லாவற்றைப்பற்றியும் கொஞ்சம் கொஞ்சம் தெரிந்து வைத்துக் கொண்டு, சர்வ கலா வல்லவன் போல் சந்தர்ப்பமறிந்து ஆட்களுக்குத் தக்கவாறு பேசுவதில் நிபுணன். “எங்காவது அயர்லாந்திலோ அரிசோனாவிலோ, உலக ஐக்கிய ஜட்காவண்டி சம்மேளனம் நடத்தினால் இந்தியாவின் பிரதிநிதியாக சர்க்காரில் என்னைத்தான் அனுப்புவார்கள்! தொழிலில் எனக்கு அவ்வளவு அனுபவம்!” என்று மார்தட்டிக் கொள்வான்! அகில உலக அஸ்வ பரிபாலன கமிட்டி ஒன்றை நிரந்தரமாக ஏற்படுத்தி, அதற்கு அவனை அசைக்க முடியாத ‘பிரசிடெண்டாக’ நியமிக்கவேண்டும் என்று அவன் நண்பர்கள் கூறுவார்கள். “சாமி! இப்போதைய நாகரீகமெல்லாம் பின் நோக்கித்தான்போகுது! பழைய காலத்து சமாச்சாரங்களுக்குத்தான் நாகரீகம் திரும்புது. பொம்பிள்ளைகளெல்லாம் முழுக்கை ரவிக்கை போடறாங்க! காதிலே குண்டலமும், இடுப்பிலே சுங்கடிப் புடவையும் துலங்குது! அதுபோலே இந்தரயில், மோட்டார் எல்லாம் நின்றுபோய் ஜட்காவண்டி சகாப்தம் கூடிய சீக்கிரமே வரப்போகுது!” என்று பெரிய அரசியல்வாதியின் மேடைப் பிரசங்க பாணியில் பேசுவான்.

* * * *

“சாமி! என்னங்க! பெரிய யோசனையிலே மூழ்கிட்டீங்களே! ஸ்டேஷன் வந்தாச்சு! இறங்குங்க” என்றான் மருதமுத்து. நான் திடுக்கிட்டு நிமிர்ந்தேன். அவன் வண்டியில் ஏறியதுமே நான் அவனைப்பற்றிய விஷயங்களை சிந்திக்கத் தொடங்கிவிட்டதால் அவன் என்னைக் கூப்பிட்ட பிறகுதான் என் சுய ஞாபகம் வந்தது. வண்டியைவிட்டு இறங்கியதும் நான் கண்ட காக்ஷி என்னை மேலும் பிரமிக்கச் செய்தது. ஸ்டேஷனில் நான் போக வேண்டிய ரயில் வண்டி ஏற்கனவே வந்து புறப்படத் தயாராக இருந்தது. “அட மருதமுத்து! உன் வண்டியில்ஏறியதற்கு பதிலாக நடந்து வந்திருந்தால்கூட ரயிலைப் பிடித்திருப்பேனே இப்போ ரயில் புறப்பட்டுவிடும்போலிருக்கு. ஓடு! இந்தா இரண்டு ரூபாய்! ஜங்ஷனுக்கு டிக்கட் வாங்கிக்கொண்டு மீதி சில்லரை கொண்டா!” என்று கோபமும் துக்கமும்கலந்த குரலில் சொல்லிக்கொண்டே இரண்டு ரூபாய் நோட்டை நீட்டினேன்.

புக்கிங் ஆபீஸ்வரை போன மருதமுத்து அங்கு யாரையோ விசாரித்துவிட்டு, சிரித்துக் கொண்டே டிக்கட் வாங்காமல் திரும்பி வந்தான். “சாமி! இது ராத்திரி வர வேண்டிய வண்டியாம்! உங்க வண்டி இன்னும் ஒரு மணி நேரத்தில் வருதாம்” என்று ரூபாயை என்னிடம் கொடுத்துவிட்டு ஒதுங்கி நின்றான். மேலும் தொடர்ந்து “சாமி! இப்போ ரயில் வண்டிங்களெல்லாம் பெரிய மனுஷ தோரணை கொண்டாடுதுங்க! தாமசமாய் வருவதிலே அதுகளுக்கு ரொம்ப பெருமை போலிருக்கு” என்றான். அவன் ஹாஸ்யத்தை அனுபவித்துக் கொண்டே, பையைத் துளாவி அவனுக்குச் சேர வேண்டிய நாலணாவை எடுத்து நீட்டினேன். ஏகப்பட்ட அபினயத்துடன் அந்தத் துட்டை வாங்காமலேயே மிகவும் குழைவாகப் பேச ஆரம்பித்தான் மருதமுத்து.

“சாமி! கிட்டவெல்லாம் துட்டு வாங்கியா கோட்டை கட்டப் போகிறேன்! இருக்கட்டும் சாமி! அதைச் சேர்த்து இன்னொரு சமயம் வாங்கிக்கொள்கிறேன்... உங்களாலே ஒரு சின்னக் காரியம் ஆக வேண்டும்” என்றான் பலத்த பீடிகையுடன். “என்ன மருதமுத்து! பெரிய கோட்டையைப் பிடிக்க முஸ்திபு போடுகிறாயா? அதற்காக நாலணா லஞ்சம்போலிருக்கிறது!” என்றேன் கேலியாக.

“அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க! இந்தத் தடவை முனிசிபாலிட்டியிலே நம்ப வண்டிக்கு ‘லைசென்ஸ்’ வாங்க சிரமப்படும் போலிருக்கிறது. இந்த முனிசிபாலிட்டி ஆட்களெல்லாம் ஒன்றுசேர்ந்து என்னோட வண்டியை உதவாக்கரை லிஸ்டிலே சேர்த்துட்டாங்களாம்! அவங்கதான் அவ்வளவு பெரும் உதவாக்கரைப்புள்ளிகள். அவங்களை வெளிக்கிளப்பினால்தான் ஊருக்கு விமோச்சனம்!.......உங்கச் சிபார்சிலே இந்தத்தடவை லைசென்ஸிற்கு ஏற்பாடு செய்து தரணும்.”

“உன் வண்டி ரொம்பப் புதிசுன்னு எண்ணமோ?”

“காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதானுங்க”

“இதோபாரு! உன் வண்டியிலே புதிசா அடிச்ச சாயத்தைத் தவிற மற்ற தெல்லா பாகத்தையும் மாற்று! குதிரைக்கும் ஒரு பின்னங்கால், சரியான அளவில் ‘ஸ்பேராக’ வாங்கிமாட்டு! பிறகு நான் உனக்கு நிச்சயமாய் சிபார்சு செய்கிறேன்!”

“நடக்காத விஷயத்தைப்பற்றி பேசி என்ன பிரயோஜனங்க! அப்படியெல்லாம் மாற்றுவதாயிருந்தால்தான் உங்க சிபாரிசு இல்லாமலே காரியம் முடிஞ்சு போகுமே!”

“இதோபார் வேறே ஏதாவது உதவி வேணும்னு கேளு! செய்கிறேன்”

“சரி அது கிடக்குது.........என் பையனுக்கு ஐந்தாம் கிளாசிலே ஒரு இடம் வாங்கிக் கொடுக்க அந்த ஹெட்மாஸ்டர் கிட்டே சொல்லி இதையாவது செய்யுங்க!”

“என்ன! என்ன! ஐந்தாங் கிளாசிலேயா! நம்ப ஊர் பள்ளிக்கூடத்துக்கு வந்த மவுசு உனக்குத் தெரியாது போலிருக்கு! இஞ்சினீரிங் காலேஜ், மெடிகல் காலேஜ் எல்லாம் நம்ப ஊர் எலிமெண்டரி பள்ளிக்கூடத்திடம் பிச்சை வாங்கணும்! என் பையன் ஐந்தாம் கிளாசில் இடமில்லாமல் மறுபடியும் நாலாம் கிளாசில் இருக்கிறான் தெரியுமா?......இந்த பெரிய விஷயமெல்லாம் நம்மாலே முடியாது.......உனக்கு லைசென்ஸ் வாங்கித்தரவே ஏற்பாடுசெய்துடறேன்! என்னை அதோட விட்டுடு!”

அவன் வண்டியை வேண்டி நின்ற யாரோ அவனைக் கூப்பிட்டார்கள். அவன் வண்டியை ஓட்டிக்கொண்டு போனான். நான் ஸ்டேஷனுக்குள் சென்றேன்.

இன்றும் அந்த சிரஞ்சீவி வண்டி எங்கள் ஊருக்கே ஆபரணமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

வெளிக்கிளப்பினுல்தான் ஊருக்கு விமோச்சனம்!.......உங்கச் சிபார்சிலே இந்தத்தடவை லைசென்ஸிற்கு ஏற்பாடு செய்து தரனும்.''

''உன் வண்டி ரொம்பப் புதிசுன்னு எண்ணமோ?''

''காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதானுங்க''

''இதோபாரு! உன் வண்டியிலே புதிசா அடிச்ச சாயத்தைத் தவிற மற்ற தெல்லா பாகத்தையும் மாற்று! குதிரைக்கும் ஒரு பின்னங்கால், சரியான அளவில் 'ஸ்பேராக' வாங்கிமாட்டு! பிறகு நான் உனக்கு நிச்சயமாய் சிபார்சு செய்கிறேன்!''

''நடக்காத விஷயத்தைப்பற்றி பேசி என்ன பிரயோஜனங்க! அப்படியெல்லாம் மாற்றுவதாயிருந்தால்தான் உங்க சிபாரிசு இல்லாமலே காரியம் முடிஞ்சு போகுமே!''

''இதோபார் வேறே ஏதாவது உதவி வேணும்னு கேளு! செய்கிறேன்''

''சரி அது கிடக்குது.........என் பையனுக்கு ஐந்தாம் கிளாசிலே ஒரு இடம் வாங்கிக் கொடுக்க அந்த ஹெட்மாஸ்டர் கிட்டே சொல்லி இதையாவது செய்யுங்க!''

''என்ன! என்ன! ஐந்தாங் கிளாசிலேயா! நம்ப ஊர் பள்ளிக்கூடத்துக்கு வந்த மவுசு உனக்குத் தெரியாது போலிருக்கு! இஞ்சினீரிங் காலேஜ், மெடிகல் காலேஜ் எல்லாம் நம்ப ஊர் எலிமெண்டரி பள்ளிக்கூடத்திடம் பிச்சை வாங்கனும்! என் பையன் ஐந்தாம் கிளாசில் இடமில்லாமல் மறுபடியும் நாலாம் கிளாசில் இருக்கிறுன் தெரியுமா?...... இந்த பெரிய விஷயமெல்லாம் நம்மாலே முடியாது.......உனக்கு லைசென்ஸ் வாங்கித்தரவே ஏற்பாடுசெய்துடறேன்! என்னை அதோட விட்டுடு!

அவன் வண்டியை வேண்டி நின்றயாரோ அவனைக் கூப்பிட்டார்கள். அவன் வண்டியை ஓட்டிக்கொண்டு போனுன். நான் ஸ்டேஷனுக்குள் சென்றேன்.

இன்றும் அந்த சிரஞ்சீவி வண்டி எங்கள் ஊருக்கேஆபரணமாக ஓடிக்கொண்டிருக்கிறது. எதோ கல்தடுக்கி காயப்பட்டதில் முன்னங்கால் ஒன்றும் கொஞ்சம் ரிப்பேராகப் போகவே, இப்போது மருதமுத்துவின் குதிரை தாளக் கட்டுவிடாமல், ஜதி ஸ்வரம் 'அலாரிப்பு, முதலிய விசேஷங்களுடன், பரதநாட்டிய பாணியில் ஊரில் பவனி வருகிறது. [பழங்கால நட்டுவனுர்கள்போல் அதன் பின்னுலேயே வண்டியும் கடகட குடுகுடுவென்று வருகிறதல்லவா?] புது மாடல் மோட்டார் கார்களின் ஸ்டைலில், சக்கரங்களுக்கு ஒரு சாயமும், கூட்டிற்கு வேறு வர்ணமும் அமைந்த அந்த வண்டி பஞ்சகச்சமும் ஹாட்டும் சேர்த்துப் போட்டுக்கொள்ளும் களையை அளித்துக்கொண்டிருக்கிறது.

எங்கள் ஊருக்கே பெருமையின் சின்னமாக விளங்கும், மருதமுத்துவின் குதிரை வண்டியை, நீங்கள், எங்கள் ஊர் ரயில்வே ஸ்டேஷனில் கால் வைத்ததுமே காணலாம்! ஒருவேளை அங்கு இல்லாவிட்டால் தேர்முக்கு அருகில் நிறுத்தியிருப்பான். அவசியம் ஒரு தடவை அதில் சவாரி செய்து பாருங்கள். பிறகு நான் சொல்லியிருப்பது எவ்வளவு தூரம் வடிகட்டின உண்மை என்று உங்களுக்குத் தெரியும்! [இந்தக் கட்டுரைக்கு அஸ்திவாரமாய் அமைந்த அவன் வண்டி நீடூழி வாழ்க!]

—❀—

அட்டைப்படம்

★

யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒலிம்பிக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் இவர்கள் நீந்துவதில் அபாரமான திறமைசாலிகளாம் இவர்கள் இங்கிலாந்துக்குக் கப்பலில் சென்றனர். கப்பலில் உள்ள நீர்த் தேக்கத்தில் அவர்கள் குதித்து நீந்த முற்படும்போது எடுத்த படம்

கேச விருத்திக்கு சிக்கன சுலப சாதனம்

காஷ்மீர்-குஸும்

வேண்டிய எண்ணெயில் கலந்து கொள்க

குடும்ப சரும-சஞ்சீவி ஸான்டலக்ஸ் நருமண சந்தனக்கழிம்பு

மைசூர் M.R. ஜெட்டப்பாவின் பிரேமலீலா உயர்தர ஊதுவத்திகள்

ஸோல்ஏஜண்ட: யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதராஸ். 1

டிப்போக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.

சக்தி ஆருடம்!

சென்னை சர்க்கார் மீன் இலாகா, கெஜட்பதவி உத்தியோகத்திலிருக்கும் Sri S. V. கணபதி (Hydrologist) 7-6-'48ல் எழுதுகிறர்:— ''தங்கள் பலன்கள் ஆச்சரியமானவை. பலன்களில் மிகவும் திருப்தி.''

1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I.)

ஜோதிஷ வித்வான்

V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க.....................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு..............................அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க...ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம்

40–நாள் மருந்து ரூ. 3-12-0.
பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது.
ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

இரத்த புஷ்டிக்கு

புனர் சக்தி

காப்ஸ்யுல்கள்.

தங்கம், வெள்ளி, முத்து, மகரத்துவஜம், அயம், அப்பிரகம், கஸ்தூரி, கோரோஜனை முதலியவை சேர்ந்தது.

இரத்த சுத்தி, இரத்த விருத்தி, மனோபலம், தேக பலம், அழகு, ஆரோக்யம், உண்டாகும். தேகக்கட்டும், இளமையும் குறையாமலிருக்கும். நாள்பட்ட எந்த வியாதியும் குணமாகும். ஆண், பெண் யாவரும் சாப்பிடலாம். இரத்த புஷ்டிக்கு நிகரற்ற டானிக். விலை ரூ. 5—0—0 தபால் செலவு அணா 12.

முன் பணம் அனுப்பவேண்டும். வி. பி. கிடையாது.

Distributors: மெடிகல் எம்போரியம், ஈரோடு.

ஸாயி கவசம்

(உத்தரவாதம் பெற்றது)

பரீக்ஷை, தொழில், வழக்கு, வியாபாரம், காதல் இவை வெற்றிக்கும், புத்திரன், தனம், அதிகாரம், ஞானம் இவை விருத்திக்கும், ஆரோக்யம், சுகம், சம்பத்து கைகூடுவதற்கும் இன்றியமையாதது. பூஜை செய்தனுப்புவதால் ஜன்ம நக்ஷத்திரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை. பலனில்லையேல் பணம் வாபீசு. விலை ரூ. 3–8.
ஸ்பெஷல் ரூ. 10. தபால் செலவு உள்பட. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

ஸாயி ஜோதிடர் ஸாயி ஆஸ்டிரல் ஸ்டுடியோஸ், உறையூர் - திருச்சி.



குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ்.	லக்ஷ்மி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

உங்கள் எதிர்காலம்



பணநிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல்,மலச்சிக்கல்; ஞாபககுறைவு,பித்தம்,காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில தேவையுள்ளோர் தபால் சிலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால்
H. O. TRIVANDRUM
189 வக்கீல் புதுதெரு- P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனஙகள்:— 207 நாகேஸவரா் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்



ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்குரூ.7.

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்து விடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்

வியாதி, மனோவிசாரம், தரித்திரம் இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதி ஸரஸ்வத்ரம், ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸதாபிக்கப்பட்டு இருக்கிறது கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.
ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

எல்லோரும் எங்கள் பி. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் – பாதம் எண்ணெய் – அம்லா ஹேர் ஆயில் – வாசனை தேங்காய் எண்ணை - கஸ்தூரி குங்குமப்பூ - கோரோஜனம் – ஊருகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து–பஞ்சாப்தேன் - முத்து பன்னீர்–ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் – இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதருஸ்.

ப்ராங்கைடிஸ்

இரவு இருமல்

மற்றும் இதர மார்பு & சுவாசப்பை தகராறுகளுக்கு

பெப்ஸ் சிறந்தது



ஒரு நல்ல ருசியுள்ள பெப்ஸ் வில்லையை உட்கொள்ளுங்கள் அது கரைந்தவுடன் சுவாசத்துடன் அதன் மருந்து சத்துக்கள் சுவாசப்பைக்குள் சென்று, சீக்கிர நிவாரண மளிக்கும். பெப்ஸ் இருமலை நிறுத்தி, புண்ணாகிய உறுப்புகளுக்குச் சமனமூட்டி, குணமாக்கி சளியைத் தளரச்செய்து அடைப்பை நீக்கும்.
ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி,
பி. டி. மதராஸ்



பெப்ஸ் மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதை குறிக்கும் படம்.

PEPS

கிருமி நாச

தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு, சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பயனளிக்கவல்ல நிவாரணி.

Lovely long hair

100% மருந்து பூர்வமானது; வாசனையுள்ளது, மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சி யளித்து கேசம் வளர உதவும்

VIJAYA CHEMICAL & TOILET WORKS
21 & 22 Suriyanarayana Chetty St,
Royapuram, Madras.

மறுக்க முடியாத உண்மை !
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே !!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.
போன் நெ. 3432.

9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை
இரண்டாம் பாகம் ,, ரூ. 2.
மூன்றாம் பாகம் ,, ரூ. 2.
தபால் செலவு அணா 10.
முன்பணம் அனுப்பவேண்டும்.
V. P. P. அனுப்புவது கிடையாது.

மானேஜர் :
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட்ரோட், மதராஸ்.

ஸ்ரீ சாயிநாதய நம :

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ. 5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	,, 1.
விவாக பொருத்தம்பார்க்க	,, 3.
ஆயுள் பலன் எழுத	ரூ. 100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.



வைரங்கள், நகைகள்

பருமனைக்கொண்டு மட்டும் வைரத்தின் மதிப்பை அளவிட முடியாது. வர்ணம், பட்டை பிரகாசம், இவற்றையும் கொண்டே மதிப்பிட வேண்டும் ஆகையால் வைரமோ, வைரம் பதித்த நகைகளோ வாங்கும்போது, நம்பிக்கையும் அனுபவமும் வாய்ந்த நகைவியாபாரியின் உதவியை நாடவேண்டும்.

உம்மிடி
ராமையா செட்டி குருஸாமி செட்டி & கோ.
23-25, சைனாபஜார் ரோடு, சென்னை.

BJR 103 Tm

பிரசித்திப் பெற்ற
" காஸினோ "
முகப் பவுடர்.

உங்கள் முகத்தை பொலிவுடன் பிரகாசிக்கச் செய்கிறது

வாங்கும் பொழுது காஸினோ லேபிளைப்பார்த்து வாங்குங்கள்

CHANDRA TRADING CO.,
93, ACHARAPPAN ST., G.T. MADRAS 1



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

***M. R.* பார்த்தசாரதி ஐயங்கார்,**
28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

பரிசு! பரிசு !!

போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாறுகிர்கள். பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனான ஆர். கிருஷ்ணா பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. **N. B.** 25 காலி உரை அனுப்பினால் 50—0-0-3 பொட்டலம் இனாம்.

S. M. கிருஷ்ணா அண்டு கோ.,
2-137, ஆதியப்ப நாய்க்கன் தெரு,
மதராஸ் 1.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானால் ரியல் அசோகா அண்டு கோ. வில் வியாபார தொடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை செண்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸலீன், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும். அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N. B. ஒரு கேஸ் பாக்கு தூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம், கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.,
40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

1

குழந்தை அழுகிறது

(ஒரு காரணமுமின்றி)

2

அதற்கு

கிரைப் ஸிரப்

கொடுங்கள் (அருசி யில்லாதது)

3

குழந்தை சிரிக்கிறது

ஒரு ITL தயாரிப்பு

BGK-16TM

தயாரிப்பவர்கள் :
மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரெட்டரி லிமிடெட்., மல்லேஸ்வரம், பெங்களூர்.

விற்பனை ஏஜெண்டுகள் :
பெஸ்ட் & கம்பெனி, லிமிடெட்., த. பெ. 63, சென்னை.

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம் : 1936)

டெலிபோன: 2246. தந்தி : கிளாவா பீடி



லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர் தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முஹம்மது நூருல்லா

ஸோல புரொப்ரைட்டர்,

ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்

37. மண்ணடி, மதராஸ்.

கப ரோக நிவாரணி

இருமல், ஈளை இருமல், வரட்சி, இளைப்பு, சுவாசம் எரைப்பு, மூச் சடைப்பு, புகைச்சல் இருமல், சாதாரண இருமல், மார்ச்சளி, அஸ்தி ஜுரம் கபத்தில் ரத்தம் வருதல், தொண்டை ரணம், ஈரல் ரணம், குலை ரணம் இவைகள் போன்ற இன்னும் எந்விதமான தீராத கபரோக வியாதியையும் தீர்த்து கபக் கிருமிகளைக் கொன்று கபத்தை தண்ணீராய் கரைத்து இருமலை அறவே ஒழித்து நல்ல நித்திரையைக் கொடுக்கும் — இது ஓர் நிகரற்ற சஞ்சீவி. இதற்கு பத்தியம் கிடையாது—குழந்தைகளும் உபயோகப் படுத்தலாம். 1 அவுன்ஸ் புட்டி ரூ. 2. பாக்கிங் வி. பி. செலவு தனி. முன்பணமாக 50% அனுப்பவேண்டும்.

தயாரிப்பவர்கள் :

சதர்ன் இந்தியா மெடிகல் ஹவுஸ்,

மைலாபூர், : : மதராஸ்.

Sole Selling Agents:

என் ஸீ ஏ ஜ ன் ஸீ ஸ்,

2/36, Luz Church Road, MYLAPORE, MADRAS.

Consult: **Dr. V. ராஜரத்னம்,**

For Nervous Debility. Diabetes, T. B., etc., at the above address.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

Regd. No. 2514

உடனடியான சேவை!

K. V. ஈஸ்வர ஐயர்,
அஸிஸ்டண்ட் அக்கவுன்ட்ஸ் ஆபீஸர்,
மத்திய மாகாணம் & பீரார்.
நாகபுரி.

நகைகள் சரியாக சமயத்திற்கு கொடுக்கப்பட்டதுமல்லாமல் நாகரீக முறையில் உன்னதமாக தயாரிக்கப்பட்டுள்ளன. தாங்கள் அனுப்பிவைத்த மூன்று நகைகளைக்கண்டு அது சம்பந்தப்பட்டவர்கள் மிகவும் திருப்தியடைந்துள்ளார்கள். தங்களது திறமைவாய்ந்த நிபுணர்களால் தயாரிக்கப்பட்டு திருப்திகரமாக நிறைவேறிய வியாபாரத்தைக்கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். இதற்குமேல் எதைத் தான் கடைக்காரர் ... அல்லது வாடிக்கைக்காரர் விரும்பமுடியும்?

(ஒப்) *K. V.* ஈஸ்வர ஐயர்.

கண்யமான வியாபாரம்!

ஸூரஜ்மல்ஸ்

நம்பிக்கையான வியாபாரிகள்
1895ஆம் முதல்

313, நேதாஜி ரோட்,
மதராஸ்.